# பணமும் வங்கித் தொழிலும்

## பண நிரம்பல்

### பொதுவான போக்குகள்

நாணயக்கூட்டுக்களின் வளர்ச்சியில் 1993 ஆம் ஆண்டு, விரைவான வேகமொன்றினை எடுத்துக்காட்டியது. குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1992 இன் 7.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதத்தினால் அதிகரித்தது. இதே போக்கினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் விரிந்த பணநிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் 16.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 23.5 சதவீத ஆண்டு வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்தது. நாணய வளர்ச்சியில் ஏற்பட்ட வேகம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் மிகத்தெளிவாகக் காணப்பட்டது. 1993 சனவரி – யூன் காலப்பகுதியில் 15.1 சதவீதத்திலிருந்து 11.6 சதவீதத்திற்கு கீழ்நோக்கி அசைந்த $M_1$ இன் ஆண்டு வளர்ச்சி அதன்பின்னர் விரைவுபெற்று, 1993 திசெம்பரில் 19 சதவீதத்தினை அடைந்தது. அதேவேளை 1993 மாச்சுக்கும் யூனுக்குமிடையில் 20.5 சதவீதத்திலிருந்து 18.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த $M_2$ இன் ஆண்டு வளர்ச்சி பின்னைய மாதங்களில் விரைவுபெற்று ஆண்டின் இறுதியில் 23.5 சதவீதத்தினை அடைந்தது.

உயர்ந்த நாணய வளர்ச்சிக்கு 1993 இல் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இது வங்கித்தொழில்முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1992 இன் ரூ. 241,620 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 454,000 இலட்சத்திற்கு 87.9 சதவீதத்தினால் மிகக்கூடுதலாக உயர்வடைந்தமையில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. தனியார்துறைக்கான கொடுகடன் 21 சதவீதத்தினால் பெருமளவிற்கு அதிகரித்தபோதும் உள்நாட்டுக் கொடுகடன் 3.5 சதவீதத்தினால் மட்டும் மிதமாக வளர்ச்சியடைந்தமை நாணயக்கூட்டுக்களின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதாகவும் இருந்தது. உள்நாட்டுக்கொடுகடன் விரிவாக்கத்தின் இம்மிதமான தன்மையானது அரசிற்கான தேறிய கொடுகடனில் மிகக்கூடியளவு குறைப்பினைத் தோற்றுவித்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் செயலாற்றத்தினால் ஏற்பட்டதாகும்.

ஆண்டின் இறுதியில் நாணயத்தளம் (உயர்வலு நாணயம் அல்லது ஒதுக்கு நாணயம்) ரூ. 564, 670 இலட்சமாக விளங்கி 25.9 சதவீதமான (ரூ. 116,090 இலட்சம்)அதிகரிப்பினைக் காட்டியது. முன்னைய ஆண்டில் ஒதுக்கு நாணயம் ஒப்பீட்டு ரீதியில் 12.0 சதவீத (ரூ. 48,020 இலட்சம்) மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மூலப்பக்கத்தில் ரூ. 246,760 இலட்சத்தினால் அதிகரித்த மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒதுக்கு நாணயத்தில் ஏற்பட்ட பெருமளவு உயர்விற்கான முக்கிய உதவுகாரணியாக இருந்தன. எனினும், மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 130,670 இலட்சம் கொண்ட குறைப்பானது தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பெருமளவு காரணமாக அமைந்ததுடன், ஒதுக்கு நாணயத்தின் வளர்ச்சியினை ரூ. 116,090

**பண நிரம்பல்**

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.62

## நாணயக்கூட்டுக்கள் 1991 - 1993

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கால முடிவில் | 1991 | 1992 | 1993 | 1990 ஐ விட 1991 இல் சதவீத மாற்றம் | 1991 ஐ விட 1992 இல் சதவீத மாற்றம் | 1992 ஐ விட 1993 இல் சதவீத மாற்றம் | 1991 | 1992 | 1993 | 1990 ஐ விட 1991 இல் சதவீத மாற்றம் | 1991 ஐ விட 1992 இல் சதவீத மாற்றம் | 1992 ஐ விட 1993 இல் சதவீத மாற்றம் |
| சனவரி | 39,913 | 44,833 | 51,582 | +12.6 | +12.3 | +15.1 | 90,161 | 112,867 | 133,234 | +17.3 | +24.6 | +18.6 |
| பெப்புருவரி | 40,416 | 46,128 | 51,519 | +10.0 | +14.1 | +11.7 | 90,867 | 113,572 | 135,238 | +15.6 | +25.0 | +19.1 |
| மாச்சு | 41,876 | 48,312 | 53,869 | +12.0 | +15.4 | +11.5 | 93,814 | 116,193 | 140,062 | +15.6 | +23.9 | +20.5 |
| ஏப்பிறல் | 41,411 | 48,492 | 53,954 | +8.6 | +17.1 | +11.3 | 94,292 | 118,710 | 142,177 | +15.2 | +25.9 | +19.8 |
| மே | 41,190 | 47,304 | 53,003 | +12.0 | +14.8 | +12.0 | 95,317 | 118,398 | 140,838 | +18.0 | +24.2 | +19.0 |
| யூன் | 41,602 | 47,007 | 52,465 | +14.3 | +13.0 | +11.6 | 96,162 | 117,627 | 139,508 | +18.1 | +22.3 | +18.6 |
| யூலை | 40,801 | 46,208 | 53,443 | +12.7 | +13.3 | +15.7 | 96,456 | 117,513 | 142,054 | +18.4 | +21.8 | +20.9 |
| ஓகத்து | 41,821 | 46,687 | 54,073 | +14.6 | +11.6 | +15.8 | 98,941 | 119,144 | 143,054 | +19.3 | +20.4 | +20.1 |
| செத்தெம்பர் | 43,274 | 47,285 | 55,149 | +15.6 | +9.3 | +16.6 | 101,896 | 120,447 | 146,286 | +19.8 | +18.2 | +21.5 |
| ஒற்றோபர் | 43,187 | 46,758 | 55,693 | +17.3 | +8.3 | +19.1 | 105,366 | 122,975 | 149,584 | +22.6 | +16.7 | +21.6 |
| நவெம்பர் | 43,157 | 47,107 | 55,996 | +15.1 | +9.2 | +18.9 | 107,976 | 125,090 | 154,153 | +24.6 | +15.8 | +23.2 |
| திசெம்பர் | 47,055 | 50,490 | 60,104 | +18.0 | +7.3 | +19.0 | 112,097 | 130,701 | 161,362 | +23.2 | +16.6 | +23.5 |
| மாதாந்தச் சராசரி | 42,142 | 47,218 | 54,238 | +13.6 | +12.0 | +14.9 | 98,612 | 119,395 | 143,963 | +19.1 | +21.1 | +20.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

இலட்சத்திற்குக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. நாணய வழங்கலுக்கும் நாணயத்தளத்திற்குமிடையிலான விகிதமான பணப்பெருக்கி 1992 திசெம்பரில் 2.91 இலிருந்து 1993 திசெம்பரில் 2.86 இற்கு வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கி வைப்புக்களின் மீது உயர்ந்த நியதி ஒதுக்கு தேவைப்பாடுகள் 1993 இல் பணப்பெருக்கி குறைவடைவதற்குதூண்டியது.

ஆண்டு முழுவதும் காணப்பட்ட தொடர்ச்சியான உயர்ந்த நாணய வளர்ச்சியானது 1993 இல் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையை இறுக்கமாக்குவதற்கு நிர்ப்பந்தித்தது. இக்கொள்கையுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புக்கள் அதேபோன்று வெளிநாட்டு நாணய வைப்புப்பொறுப்புக்கள் என்பனவற்றின் மீதான நியதி ஒதுக்கு விகிதங்கள் பல தடவைகள் மேல் நோக்கி உயர்த்தப்பட்டன. இக்கருவியின் தாக்கத்தினை மேலும் வலுவாக்கும் நோக்குடன் அனைத்து வைப்புப் பொறுப்புக்களினதும் மீதான ஒதுக்கு விகிதங்கள் 1993 ஒகத்திலிருந்து 15 சதவீதத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டன. மேலும் ஆண்டின் நடுப்பகுதியில் 30 சதவீதத்தில் மிக உயர்வாக நிலைபெற்றிருந்த தனியார்துறைக்கான கொடுகடன் வளர்ச்சியை மிதமாக்குவதற்கு வர்த்தக வங்கிகளின் மீது நெறிசார்ந்த இணக்கப்பாடு பின்பற்றப்பட்டது. வெளிநாட்டு நிதியங்களின் பெருமளவு உட்பாய்ச்சல்களின் பின்னணியில், பொருளாதாரத்திலுள்ள மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்ளும்பொருட்டு திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் மற்றும் மத்திய வங்கிப்பிணைகள் என்பனவற்றினூடாக மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேலும் தீவிரமாக்கியது. இக்கொள்கைகளுக்குப் புறம்பாக, ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியை மட்டுப்படுத்துமுகமாக 1993 இல் மத்தியவங்கி மீள்நிதியிடல் கொடுகடனின் மீது கட்டுப்பாடுகளை விதித்தது. திரவத்தன்மை வளர்ச்சியை மட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இந்நடவடிக்கைகளின் விளைவாக, குறுங்கால வட்டிவீதங்கள் ஆண்டு முழுவதும் உயர்வாகக்காணப்பட்டன.

### பண நிரம்பலும் ஏதுக்காரணிகளும்

1993 இல், நாணயத்தையும் பொதுமக்கள் வசமிருந்த கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கிய குறுகிய பணநிரம்பல் ($M_1$) முன்னைய ஆண்டின் 7.3 சதவீதங்கொண்ட (ரூ. 34,350 இலட்சம்) மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 19.0 சதவீதத்தினால் (ரூ. 96,140 இலட்சம்) உயர்வடைந்தது. கேள்விவைப்புக்கள், 1992 இன் 5 சதவீதத்துடன் (ரூ. 10,080 இலட்சம்) ஒப்பிடுகையில் 21 சதவீதத்தினால் (ரூ. 47,610 இலட்சம்) அதிகரித்தவேளையில் நாணயச் சுற்றோட்டம் முன்னைய ஆண்டின் 10 சதவீத (ரூ. 24,280 இலட்சம்) உயர்வுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதத்தினால் (ரூ. 48,530 இலட்சம்) வளர்ச்சியுற்றது. இதன்படி 1993 இல் $M_1$ இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பங்கு முன்னைய ஆண்டின் 54 சதவீதத்திலிருந்து குறைவடைந்து 53 சதவீதத்திற்கு வகைகூறியது.

அதேவேளை, பொதுமக்களால் வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புக்கள் (போலிநாணயம்) 1992 இன் 23 சதவீத (ரூ. 151,680 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 26 சதவீதத்தினால் (ரூ. 210,470 இலட்சம்)

உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.63

## நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும் 1991 - 1993

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | 1991 திசெம்பர் | 1992 திசெம்பர் | 1993 திசெம்பர் | மாற்றம் 1991/1992 | | மாற்றம் 1992/1993 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 24,852 | 27,280 | 32,133 | +2,428 | +9.8 | +4,853 | +17.8 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 22,202 | 23,210 | 27,971 | +1,008 | +4.5 | +4,761 | +20.5 |
| குறுகிய பண நிரம்பல் ($M_1$) | 47,055 | 50,490 | 60,104 | +3,435 | +7.3 | +9,614 | +19.0 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 65,043 | 80,211 | 101,258 | +15,168 | +23.3 | +21,047 | +26.2 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் | 1,743 | 2,714 | 3,287 | +971 | +55.7 | +573 | +21.1 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் | 7,509 | 7,391 | 10,287 | -118 | -1.6 | +2,896 | +39.2 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) | 55,791 | 70,106 | 87,684 | +14,315 | +25.7 | +17,578 | +25.1 |
| விரிந்த பண நிரம்பல் ($M_2$) | 112,097 | 130,701 | 161,362 | +18,604 | +16.6 | +30,661 | +23.5 |
| **ஏதுக் காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் | 134,226 | 153,347 | 158,709 | +19,121 | +14.2 | +5,362 | +3.5 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் | 41,792 | 42,350 | 35,004 | +558 | +1.3 | -7,346 | -17.3 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 59,458 | 54,090 | 43,110 | -5,368 | -9.0 | -10,980 | -20.3 |
| மத்திய வங்கியால் | 45,981 | 40,604 | 24,810 | -5,377 | -11.7 | -15,794 | -38.9 |
| வர்த்தக வங்கிகளால் | 13,477 | 13,486 | 18,300 | +9 | +0.1 | +4,814 | +35.7 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் | 17,666 | 11,740 | 8,106 | -5,926 | -33.5 | -3,634 | -31.0 |
| 1.2 தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 92,434 | 110,997 | 123,704 | +18,563 | +20.1 | +12,707 | +11.4 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் | 1,757 | 2,021 | 1,903 | +264 | +15.0 | -118 | -5.8 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் | 14,077 | 14,750 | 7,775 | +673 | +4.8 | -6,975 | -47.3 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் | 76,599 | 94,226 | 114,026 | +17,627 | +23.0 | +19,800 | +21.0 |
| 2.வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) | 17,431 | 24,162 | 45,400 | +6,731 | +38.6 | +21,238 | +87.9 |
| 2.1 மத்மதிய வங்கி (தேறிய) | 13,486 | 21,049 | 45,725 | +7,563 | +56.1 | +24,676 | +117.2 |
| 2.2 வர்த்தக வங்கிகள் (தேறிய) | 3,945 | 3,113 | -325 | 832 | -29.1 | -3,438 | -110.4 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) | -39,560 | -46,808 | -42,747 | -7,248 | -17.7 | +4,062 | +8.7 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய | -15,739 | -19,903 | -17,170 | -4,164 | -26.5 | +2,733 | -13.7 |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -23,777 | -25,721 | -20,335 | -1,944 | -7.0 | +5,386 | +20.9 |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் | -44 | -1,184 | -5,242 | -1,140 | -2,590.9 | -4,058 | -342.7 |
| விரிந்த பண நிரம்பல் ($M_2$) | 112,097 | 130,701 | 161,362 | +18,604 | +16.6 | +30,661 | +23.5 |

குறிப்பு : அடையாளங்கள் $M_2$ இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டைப் போன்றே தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 25 சதவீதத்தினால் (ரூ. 175,780 இலட்சம்) விரிவடைந்த தனியார்துறைக்கூறுகளின் வைப்புக்களில் பெருமளவிற்குப் பிரதிபலித்தது. அரச கூட்டுத்தாபனங்களினதும் கூட்டுறவு நிறுவனங்களினதும் தவணை சேமிப்பு வைப்புக்கள் முறையே 39 சதவீதத்தினாலும் (ரூ. 28,960 இலட்சம்), 21 சதவீதத்தினாலும் (ரூ. 5,730 இலட்சம்) வளர்ச்சிகண்டன. தவணை, சேமிப்பு வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த சாதகமான உண்மை வட்டிவீதங்கள், வைப்புக்களைத் திரட்டும் முயற்சியை வர்த்தக வங்கிகள் மேலும் செறிவுபடுத்தியமை மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒன்று சேர்ந்ததன் மூலம் திரவத்தன்மை தொடர்ச்சியாக அதிகரித்தமை என்பன 1993 இல் வர்த்தக வங்கிகளின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் உயர்ந்தளவில் வளர்ச்சியடைய தூண்டுதலாக அமைந்தன. இதனால் $M_1$ இனையும் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை, சேமிப்பு வைப்புக்களையும் கூட்டியதான விரிந்த பணநிரம்பல் ($M_2$) 1993 இல் 23.5 சதவீதத்தினால் (ரூ. 306,610 இலட்சம்) விரிவடைந்தது. $M_2$ இன் உள்ளமைப்பில் 1991 இன் 58 சதவீதத்திலிருந்து 1992 இல் 61 சதவீதத்திற்கு உயர்வடைந்த போலி நாணயத்தின் பங்கு 1993 இல் 63 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்து வங்கித் தொழில் முறையில் வட்டி உழைக்கும் வைப்புக்கள் உறுதியாக வளர்ச்சியடைந்தமையைப் பிரதி பலித்தன.

வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரைவான அதிகரிப்பு, தனியார்துறைக்கான கொடுகடனின் தொடர்ச்சியான விரிவாக்கம் என்பன 1993 இல் நாணய வளர்ச்சிக்கான முக்கிய அடிப்படைக் காரணிகளாக இருந்தன. இவ்வாண்டில் வங்கித்தொழில்முறையிலுள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 38.6 சதவீத (ரூ. 67,310 இலட்சம்.) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 87.9 சதவீதமான (ரூ. 212,380 இலட்சம்) வியத்தகு உயர்வினைப் பதிவுசெய்தன. அதேவேளை, அரசிற்கான தேறிய கொடுகடன், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கான, கொடுகடன் என்பனவற்றில் பெருமளவு வீழ்ச்சிகள் காணப்பட்டபோதும் உள்நாட்டுக் கொடுகடன் 3.5 சதவீதம் (ரூ. 53,620 இலட்சம்) கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு 1993 இல் தனியார்துறைக்கூறுகளுக்கான 21 சதவீதம் கொண்ட (ரூ. 198,000 இலட்சம்) மிக உயர்ந்த கொடுகடன் வளர்ச்சியே காரணமாகும்.

ஆண்டு முழுவதும் உயர்ந்த கடன் வழங்கல் வீதங்கள் காணப்பட்டபோதும், தனியார்துறைக் கொடுகடனில் ஏற்பட்டவளர்ச்சி 1992 இன் 23 சதவீதத்திலிருந்து 1993 இல் 21 சதவீதத்திற்கு சிறிதளவால் மட்டுமே வீழ்ச்சியடைந்தது. தனியார்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட வலுவான உயர்விற்கு 200 ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட கைத்தொழில்களினால் உருவாக்கப்பட்ட கொடுகடனுக்கான உயர்ந்த கேள்வியும் தனியார்துறை மற்றும் மக்கள்மயப்படுத்தப்பட்ட பேருந்துக் கம்பனிகளின் பேருந்துக் கொள்வனவிற்கு வசதியளிப்பதற்கான நிதியிடல் ஒழுங்குகளும் ஓரளவிற்குக் காரணமாகும்.

1993 இல் வங்கித்தொழில் முறையினால் அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் முன்னைய ஆண்டின் 1 சதவீதம் (ரூ. 5,580 இலட்சம்) கொண்ட சிறிதளவு அதிகரிப்பிற்கு மாறாக 17 சதவீதத்தினால் (ரூ. 73,460 இலட்சம்)

## வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சியடைந்தது. அரச வைப்பு நிலுவைகளிலிருந்து ரூ. 8,640 இலட்சமும், மத்திய வங்கி முற்பணங்களிலிருந்து மேலும் ரூ. 20,530 இலட்சமும் பயன்படுத்தப்பட்டபோதும் மத்திய வங்கியிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 149,320 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 178,480 இலட்சத்தினால் மிக அதிகளவில் குறைவடைந்தமையே காரணமாகும். மாறாக, வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 75,850 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் உடைமைகள் ரூ. 36,210 இலட்சத்தினால் அதிகரித்தமையும் அரச வைப்பு நிலுவைகள் ரூ. 27,710 இலட்சமளவிற்குப் பயன்படுத்தப்பட்டமையுமே பெருமளவிற்குக் காரணங்களாகும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிகரித்த வங்கிக் கொடுகடனை நாடியபோதும் இவ்வாண்டில் அரச கூட்டுத்தாபனங்களின் பொதுவான கொடுகடன் பயன்பாடு 47 சதவீதத்தினால் (ரூ. 69,750 இலட்சம்) வீழ்ச்சியடைந்தமைக்கு பல காரணிகள் காரணமாகின. இரு அரச வங்கிகளின் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபத்தினதும் வெளிநின்ற கொடுகடன் மட்டங்கள் முறையே ரூ. 29,600 இலட்சத்தினாலும் ரூ. 17,160 இலட்சத்தினாலும் குறைக்கப்பட்டன. முன்னைய ஆண்டில் அதன் வெப்ப மின்வலு பொறியின் தொழிற்பாட்டிற்காக வங்கிக்கொடுகடனில் பெருமளவிற்குத் தங்கியிருந்த இலங்கை மின்சபை, இவ்வாண்டில் 30 சதவீதத் தீர்வை அதிகரிப்பு மற்றும் மூலதனச் செலவின் செயற்றிட்டங்களைப் பிற்போட்டமை என்பனவற்றின் மூலம் வங்கித்தொழில் முறைக்கான அதன் பொறுப்புக்களை ரூ. 19,670 இலட்சத்தினாற் குறைத்துக்கொண்டது. அதேவேளை, சலுகை ஒழுங்குகளின் கீழ் கோதுமைத்தானியம் கிடைக்கத்தக்கதாக இருந்தமை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தொழிற்பாடுகளில் திருந்திய காசுப் பாய்ச்சல் நிலைமையினைத் தூண்டியதன் மூலம் வங்கித்தொழில்முறையுடனான பொறுப்புக்களை ரூ. 7,230 இலட்சத்தினால் குறைத்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கடன்பாடுகள் 1992 இன் 28 சதவீதங்கொண்ட (ரூ. 11,830 இலட்சம்) வீழ்ச்சிக்கு மாறாக 1993 இல் 14 சதவீதத்தினால் (ரூ. 4,160 இலட்சம்) அதிகரித்தது. அதேவேளை, கூட்டுறவு நிறுவனங்களுக்கான மொத்த வங்கிக்கொடுகடன் 1992 இன் ரூ. 20,210 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 19,030 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

சென்மதி நிலுவையில் பொதுவாக மிகைநிலைமை தொடர்ச்சியாக வலுவடைந்து வருகின்றமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், இவ்வாண்டில் வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 88 சதவீதம் கொண்ட (ரூ. 212,380 இலட்சம்) கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. இது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 246,760 இலட்சத்தினால் அதிகரித்தமையினதும் வர்த்தக வங்கிகளின் அத்தகைய சொத்துக்கள் ரூ. 34,380 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். இவ்வாண்டில் மத்தியவங்கியின் வெளிநாட்டிலிருந்த காசு நிலுவைகள் மற்றும் வெளிநாட்டு, அரச மற்றும் அரசல்லாப் பிணைகளின் உடைமைகள் ரூ. 362,970 இலட்சத்தினால் உயர்வடைந்தபோதும் தேறிய அடிப்படையில் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 246,760 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் ரூ. 116,300 இலட்சத்தினால் அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

அதேவேளை, வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 255,670 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 24.3 சதவீதம் (ரூ. 45,270 இலட்சம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீதங்கொண்ட (ரூ. 24,070 இலட்சம்) மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுவதும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளுடனான வெளிநாட்டு நாணய வைப்பு நிலுவைகளின் ஒன்றுதிரட்டலாகவே இருந்தது. மாறாக வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் மொத்தம் ரூ. 258,920 இலட்சமாக விளங்கி 1992 இன் 36.5 சதவீதத்துடன் (ரூ. 53,590 இலட்சம்) ஒப்பிடுகையில் 29.2 சதவீத (ரூ. 58,450 இலட்சம்) உயர்வினைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பானது 1993 இல் 29.5 சதவீதத்தினால் (ரூ. 53,220 இலட்சம்) வளர்ச்சிகண்ட வதியாதோர் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கணக்குகளின் பேரிலான வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்களில் முக்கியமாகப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டின் வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 37 சதவீதமாக (ரூ. 49,020 இலட்சம்) இருந்தது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சார்புரீதியான நிலைமைகளில் ஏற்பட்ட இவ்வபிவிருத்திகள் வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வெளிநாட்டு நாணய நிலையினைப் பிரதிபலித்தன.

## வர்த்தக வங்கித்தொழில்

### பொதுவான போக்குகள்

1993 இல் வர்த்தக வங்கித் தொழில்முறை திரவத்தன்மையைக் கொண்டிருந்தது. வர்த்தக வங்கிகளின் திரவச்சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 47,490 இலட்சங்கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் ரூ. 125,040 இலட்சத்தினால் அதிகரித்திருந்தன. திரவச்சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் முக்கியமாக திறைசேரி உண்டியல் மற்றும் கழிவிடத்தக்க உண்டியல்களின் முதலீடுகளில் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை பொறுப்புக்கள் பக்கத்தில் கேள்வி வைப்புக்கள் ரூ. 25,010 இலட்சத்தினால் உயர்வடைந்தன. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து கேள்வி வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதமானது 1991 இன் 160 சதவீதத்திலிருந்து 1992 இல் 167 சதவீதத்திற்கும் 1993 இல் 191 சதவீதத்திற்கும் மேலும் உயர்வடைந்து வர்த்தக வங்கிகளின் அதிகரித்த திரவத்தன்மை நிலைமையினைப் பிரதிபலித்தது. எனினும் இவ்வாண்டில் மொத்த வைப்புக்களுக்கான திரவச்சொத்துக்களின் விகிதம் ஆண்டிற்கு 40 சதவீதத்தில் மாற்றமுறாதிருந்தது.

அதேவேளை, ரூ. 241,000 இலட்சம் பெறுமதியான நீண்டகால முறிகளை வழங்கியதனூடாக இரு அரச வர்த்தக வங்கிகளும் மீள் மூலதனமயமாக்கப்பட்டதன் மூலம் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிதியியல்துறை மீளமைப்பின் முதற்கட்டத்தை நிறைவுசெய்துள்ளன. பன்னாட்டுப் போட்டிச் சூழ்நிலையில் சிறப்பான முறையில் தொழிற்படும் பொருட்டு, வங்கித்தொழில் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்பார்வை நடைமுறைக் குழுவினால் விடுக்கப்பட்ட தேவைப்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட மூலதன ஏற்றஅளவு விகிதங்களையும், மத்தியவங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

## சொத்துக்கள், பொறுப்புக்களின் அமைப்பு

1993 இல் வர்த்தக வங்கிகளின் மூலவளத் தளம் மேலும் விரிவடைந்து உயர்ந்த வைப்புத் திரட்சியையும் அதேபோன்று கொடுகடன் விரிவாக்கத்தையும் பெருமளவிற்குப் பிரதிபலித்தது. வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் (எதிரீட்டு விடயங்கள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் 19 சதவீத உயர்வுடன் (ரூ. 291,470 இலட்சம்) ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 32 சதவீதத்தினால் (ரூ. 593,970 இலட்சம்) அதிகரித்தன. பொறுப்புக்கள் பக்கத்தில், வைப்புக்கள், மூலதனத்தளம் மற்றும் பொறுப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சியானது வர்த்தக வங்கிகளின் மூலவளத்தளத்தினை உயர்த்த உதவின. 22 சதவீத அதிகரிப்பினை (ரூ. 284,700 இலட்சம்) பதிவு செய்த வைப்புப் பொறுப்புக்கள் நிதியின் முக்கிய மூலமாக விளங்கி 1993 இல் வர்த்தக வங்கிகளின் மொத்தப் பொறுப்புக்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறின. உயர்ந்த வட்டி வீதங்களின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தவணை சேமிப்பு வைப்புக்கள் 26 சத வீதத்தினால் (ரூ. 259,690 இலட்சம்) கணிசமாக வளர்ச்சியடைந்தன. அதேவேளை கேள்வி வைப்புக்கள் 8 சதவீதமான (ரூ. 25,010 இலட்சம்) மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு வர்த்தக வங்கிகளிலுள்ள அரசின் வைப்பு நிலுவைகள் ரூ. 27,710 இலட்சத்தினால் குறைவடைந்தமையே காரணமாகும். 30 சதவீதத்தினால் (ரூ. 53,220 இலட்சம்) உயர்வடைந்த வெளிநாட்டு நாணய வைப்புக்கள் முன்னைய ஆண்டின் 10 சதவீதத்திலிருந்து அதிகரித்து மொத்த வைப்புக்களில் 15 சதவீதத்திற்கு வகைகூறின. நிதியியல்துறை மறுசீரமைப்புக்களின்கீழ் இரு அரச வர்த்தக வங்கிகளினதும் மீள் மூலதனமயமாக்கலின் காரணமாக வர்த்தக வங்கிகளின் மூலதன நிதியங்கள் 1993 இல் ரூ. 133,360 இலட்சத்தினால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் 52 சதவீதத்தினால் (ரூ. 175,580 இலட்சம்) உயர்வுற்றன. அதேவேளை வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வர்த்தக வங்கிகளின் உயர்வான கடன்பாடுகள் (மத்திய வங்கி மீள் நிதியிடல் உட்பட) 14 சதவீதத்தினால் (ரூ. 13,560 இலட்சம்) உயர்வடைந்தன.

அதிகரித்த மூலவளத் தளமானது முக்கியமாகக் கடன்கள் மற்றும் முற்பணங்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் கழிவிடத்தக்க உண்டியல்கள் என்பனவற்றினூடாக வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுச் சொத்துக்கள் விரிவடையத் தூண்டுதலாக அமைந்தது. 1993 இல் வர்த்தக வங்கிகளின் மொத்தக்கடன்களும் முற்பணங்களும் 1992 இன் 19 சதவீத (ரூ. 183,830 இலட்சம்) உயர்வுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்தினால் (ரூ. 125,470 இலட்சம்) விரிவடைந்தன. கடன்களில் மட்டும் ஏற்பட்ட அதிகரிப்பு முன்னைய ஆண்டின் 16.2 சதவீதத்துடன் (ரூ. 91,070 இலட்சம்) ஒப்பிடுகையில் 14 சதவீதமாக (ரூ. 90,430 இலட்சம்) இருந்தது.

அதேவேளை கையிலுள்ள பணம், வெளிநாட்டு வைப்பு நிலுவைகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் கழிவிடப்பட்ட உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் ரூ. 659,050 இலட்சமாக விளங்கி 23 சதவீத (ரூ. 125,040 இலட்சம்) அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. உயர்ந்த விளைவுகளினால் ஈர்க்கப்பட்டதன் காரணமாகத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் மத்திய வங்கிப்பிணைகள் என்பனவற்றின் பேரிலான திரவச்சொத்துக்கள் மாத்திரம் 54 சதவீதத்தினால் (ரூ. 52,330 இலட்சம்) உயர்வடைந்தன. கழிவிடத்தக்க வர்த்தக

அட்டவணை 1.64

## வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் 1992 - 1993

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | மாதாந்த எண் தொகைகளின் சராசரி | | காலப்பகுதி முடிவில் | |
|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1992 | 1993 |
| கையிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நியதி ஒதுக்குத் தேவைகளும் உட்பட) | 15,457 | 18,172 | 16,289 | 20,562 |
| வெளிநாட்டு நிலுவைகள் | 16,095 | 19,653 | 18,113 | 20,529 |
| திறைசேரி உண்டியல்கள் | 10,206 | 11,230 | 10,653 | 14,274 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் | 9,424 | 10,712 | 8,346 | 10,541 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் | 50,897 | 59,766 | 53,401 | 65,905 |
| மொத்த முதலீடுகள் (அ) | 2,554 | 3,188 | 2,848 | 5,176 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் | 91,333 | 109,667 | 104,288 | 114,641 |
| கேள்வி வைப்புக்கள் (ஆ) | 28,647 | 31,810 | 32,063 | 34,543 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் (இ) | 88,734 | 114,058 | 101,499 | 127,919 |
| மொத்த வைப்புக்கள் | 117,381 | 145,868 | 133,562 | 162,462 |
| | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 53.9 | 57.1 | 50.8 | 59.5 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 13.2 | 12.5 | 12.2 | 12.7 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் | 13.7 | 13.5 | 13.6 | 12.6 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் | 8.7 | 7.7 | 8.0 | 8.8 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் | 8.0 | 7.3 | 6.2 | 6.5 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் | 177.7 | 187.9 | 166.6 | 190.8 |
| மொத்த வைப்புகளுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் | 43.4 | 41.0 | 40.0 | 40.6 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீட்டின் விகிதம் | 2.2 | 2.2 | 2.1 | 3.2 |
| மொத்த வைப்புகளுக்குக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் | 77.8 | 75.2 | 78.1 | 70.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) அரச, அரச உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும்.

(ஆ) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்கள் நீக்கலாக.

(இ) சிறப்பு சேமிப்பு திட்டங்களின் கீழ் அரச வங்கிகளால் 1992 ஆம் ஆண்டிலும் 1993 ஆம் ஆண்டிலும் நீண்ட தவணை வைப்புக்களாக முறையே திரட்டப்பட்ட பணத்தின் தொகையான ரூ. 27,220 இலட்சத்தையும் ரூ. 31,740 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்ட எண் தொகைகளுக்கும் இவ்வறிக்கையில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்ட அதே எண் தொகைகளுக்கும் இடையேயான முரன்பாடுகள் வரைவிலக்கண வேறுபாட்டினால் ஏற்பட்டவையாகும்.

உண்டியல்கள் மற்றும் வெளிநாட்டு நிலுவைகள் என்பனவற்றின் மூலமான திரவச்சொத்துக்களின் அதிகரிப்பு முறையே ரூ. 21,940 இலட்சமாகவும் ரூ. 24,160 இலட்சமாகவும் காணப்பட்டன. அதேவேளை நியதி ஒதுக்குத் தேவையின்பேரில் மத்திய வங்கியில் வைத்திருக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் 1993 இல் ரூ. 61,410 இலட்சத்தினால் உயர்வடைந்தமைக்கு வர்த்தக வங்கிகளின் வைப்பு நிலுவைகள் பெருமளவிற்கு அதிகரிக்கப்பட்டமையும், அனைத்து வைப்புப் பொறுப்புக்களின் மீதும் உயர்ந்த ஒதுக்குத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமையுமே காரணமாகும்.

## நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

இரு அரச வங்கிகளின் மறுசீரமைப்பின் தாக்கத்தினால் முக்கிய அரச தொழில் முயற்சிகளின் முன்னேற்றமடைந்த காசுப்பாய்ச்சல் நிலைமைகள், மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை, வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் மூலங்களினதும் நிதியங்களினதும் அமைப்பு என்பன 1993 இல் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாற்றமடைந்தன. இரு பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினாலும் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட வேண்டியிருந்த வெளிநின்ற படுகடனின் தீர்ப்பனவு, இலங்கை மின்சபை, கூ. மொ. விற்பனை நிலையம் என்பனவற்றின் முன்னேற்றமடைந்த காசுப்பாய்ச்சல் நிலைமைகள், வர்த்தக வங்கிகளுடனான அரச தொழில் முயற்சிகளின் அதிகரித்த வைப்புக்கள் என்பன அரச கூட்டுத்தாபனங்கள் 1993 இல் வர்த்தக வங்கி நிதியங்களின் முக்கிய மூலமாக அமைவதற்குக் காரணமாயின. அரச கூட்டுத்தாபனங்கள் ரூ. 98,710 இலட்சத்தினை வழங்கியதன் மூலம் 1993 இல் வர்த்தக வங்கிகளுக்கான முக்கிய நிதி வழங்குநர்களாக தோற்றம் பெற்றன.

உயர்ந்த வட்டி வீத அமைப்பானது, தனியார்துறையை வர்த்தக வங்கிகளிலிருந்து கடன்கள் முற்பணங்கள் வாயிலாக மூலவளங்களைப் பயன்படுத்துவதிலும் பார்க்க (ரூ. 198,230 இலட்சம்) கூடுதலான வைப்பு நிலுவைகளை (ரூ. 281,000 இலட்சம்) உருவாக்குவதற்குத் தூண்டியது. இதனால் தனியார்துறை ரூ. 82,990 இலட்சத்தினை வழங்கியதன் மூலம் 1993 இல் வர்த்தக வங்கி நிதிகளின் இன்னொரு முக்கிய மூலமாகத் தோற்றம் பெற்றது. மாறாக, முன்னைய ஆண்டில் அரச தொழில் முயற்சிகளும் தனியார்துறையும் வர்த்தக வங்கி நிதியங்களைப் பயன்படுத்துவோராக இருந்ததுடன் தேறிய அடிப்படையில் முறையே ரூ. 8,820 இலட்சத்தினையும் ரூ. 18,970 இலட்சத்தினையும் பெற்றுக்கொண்டன. ஆய்விற்குரிய ஆண்டில் கூட்டுறவுத்துறை வைப்புக்களை அதிகரித்தல் மற்றும் கடன்கள் முற்பணங்களைக் குறைத்துக் கொள்ளல் என்பனவற்றின் மூலமாக வங்கித்தொழில்முறைக்கு ரூ. 6,910 இலட்சத்தினை வழங்கியது. அதேவேளை வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் ரூ. 4,810 இலட்சத்தினை உருவாக்கின.

பயன்பாட்டுப் பக்கத்தில், அரசு, வர்த்தக வங்கிகளிலிருந்து பெருந்தொகையான மூலவளங்களை ஈர்த்துக்கொண்டது. வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகள் அதிகரித்தமை அரச வைப்பு நிலுவைகள் குறைக்கப்பட்டமை, இறக்குமதி உண்டியல்கள் மற்றும் ஏனைய குறுங்காலக்

அட்டவணை 1.65

## வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 1991 - 1993

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | 1991/1992 இறுதி | | 1992/1993 இறுதி | |
|---|---|---|---|---|
| | மூலங்கள் | பயன் பாடுகள் | மூலங்கள் | பயன் பாடுகள் |
| 1. **அரசதுறை** | **426.0** | - | - | **7,584.3** |
| அரச பிணைகளின் உடமைகள் | - | 922.4 | - | 3,391.3 |
| வைப்புக்கள் | 435.5 | - | - | 2,770.5 |
| இறக்குமதி உண்டியல்கள் | 380.0 | - | - | 904.8 |
| குறுந்தவணைக் கொடுகடன் | 774.3 | - | - | 659.4 |
| மேலதிகப் பற்றுக்கள் | - | 241.4 | 141.7 | - |
| 2. **மத்திய வங்கி** | - | **880.2** | - | **5,644.4** |
| கடன்பாடுகள் | - | 11.9 | 240.2 | - |
| ஒதுக்குகள் | - | 324.0 | - | 3,662.2 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் | - | - | - | 1,612.0 |
| கையிலுள்ள காசு | - | 544.3 | - | 610.4 |
| 3. **அரச கூட்டுத்தாபனங்கள்** | - | **881.6** | 9,870.8 | - |
| வைப்புக்கள் | - | 209.1 | 2,896.0 | - |
| முற்பணங்கள் | - | 672.5 | 6,974.8 | - |
| 4. **கூட்டுறவுகள்** | **863.4** | - | **690.7** | - |
| வைப்புக்கள் | 1,127.4 | - | 572.8 | - |
| முற்பணங்கள் | - | 264.0 | 117.9 | - |
| 5. **ஏனைய உள்நாட்டு தனியார்துறை** | - | **1,896.5** | **8,299.4** | - |
| வைப்புக்கள்* | 15,729.8 | - | 28,099.9 | - |
| உள்நாட்டு உண்டியல்கள் | - | 162.1 | 22.2 | - |
| இறக்குமதி உண்டியல்கள் | 999.3 | - | - | 1,601.2 |
| மேலதிகப் பற்றுக்கள் | - | 7,914.2 | - | 5,747.5 |
| கடன்கள் | - | 9,951.0 | - | 11,528.9 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு | - | 598.3 | - | 945.1 |
| 6. **வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள்** | - | **5.8** | **480.5** | - |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை | - | 429.7 | - | 644.5 |
| உள்நாட்டு வங்கிகளுடான வைப்புக்களும் கடன்பாடுகளும் | 423.9 | - | 1,125.0 | - |
| 7. **வெளிநாட்டுத் துறை** | **1,109.6** | - | - | **2,286.8** |
| கடன்பாடுகள் | 749.3 | - | 11.9 | - |
| வைப்புக்கள் | 4,888.4 | - | 106.9 | - |
| வெளிநாட்டு நிலுவைகள் - ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட | - | 4,528.1 | - | 2,405.6 |
| 8. **ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்** | **1,265.1** | - | - | **3,825.9** |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 908.2 | - | 11,983.0 | - |
| நிலையான ஏனைய சொத்துக்கள் | - | 4,748.6 | - | 32,940.9 |
| ஏனைய பொறுப்புக்கள் | 5,105.5 | - | 17,132.0 | - |
| மொத்த தேறிய மூலங்கள்/பயன்பாடுகள் | 3,664.1 | | 19,341.4 | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* சிறப்புச் சேமிப்புத் திட்டத்தின்கீழ் இரு அரச வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்.

குறிப்பு: தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறைக்குமான தேறிய மூலங்களை அல்லது தேறிய பயன்பாட்டினை அவை பொருந்துமிடங்களைப் பொறுத்துக் குறிக்கின்றன.

கொடுகடன்களின் பேரிலான கடன்பாடுகள் என்பன காரணமாக வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மீது தேறிய அடிப்படையிலான அரசின் கோரல் ரூ. 75,840 இலட்சமாக விளங்கியது. இதே போன்று, உயர்ந்த ஒதுக்குத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமை, நாணயக்கூட்டுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கிப் பிணைகளின் விற்பனை என்பனவற்றின் காரணமாக மத்திய வங்கி வர்த்தக வங்கிகளிலிருந்து 1992 இன் ரூ. 8,800 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 56,440 இலட்சத்தினை ஈர்த்துக்கொண்டது. வர்த்தக வங்கிகளினால் அதிகரித்த வெளிநாட்டு நாணயக் கடன் வழங்கப்பட்டமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுத்துறையும் முன்னைய ஆண்டின் ரூ. 11,090 இலட்சங்கொண்ட உட்செலுத்தலுக்கு மாறாக ரூ. 22,870 இலட்சத்தினைப் பயன்படுத்திக்கொண்டது.

அதேவேளை, பொருளாதாரத்திலுள்ள பல்வேறு துறைகளுக்குமான கடன்கள் மற்றும் முற்பணங்கள் வடிவில் பெறப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட பொதுவான வளர்ச்சி 10 சதவீதமாக அமைந்து (ரூ. 103,530 இலட்சம்) முன்னைய ஆண்டின் 23 சதவீதம் (ரூ. 195,360 இலட்சம்) கொண்ட அதிகரிப்பிலிருந்தும் குறிப்பிடத்தக்கஅளவிற்கு மிதமானதாக இருந்தது. இதன் காரணமாக, இவ்வாண்டில் மொத்த வைப்புக்களின் வளர்ச்சி 22 சதவீதமாக (ரூ. 284,700 இலட்சம்) அமைந்து கடன்கள் முற்பணங்களின் வளர்ச்சியிலும் வெகுவாக விஞ்சிக் காணப்பட்டது. இதன்படி, மொத்த வைப்புக்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் விகிதம் 1992 இன் 79 சதவீதத்திலிருந்து 1993 இல் 71 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. இவ்வாறிருப்பினும் ஆண்டு முழுவதும் கடன் வழங்கல் வீதங்கள் உயர்வாகக் காணப்பட்டபோதும் உண்மையான தனியார்துறைக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் தொடர்ந்தும் 21 சதவீதத்தினால் (ரூ. 198,000 இலட்சம்) வளர்ச்சியடைந்தது.

## வர்த்தக வங்கிக் கடன்கள், முற்பணங்களின் பகிர்ந்தளிப்பு *

1993 இல் தனியார்துறை, அரச தொழில் முயற்சிகள் மற்றும், கூட்டுறவு நிறுவனங்களுக்கான வர்த்தக வங்கிகளின் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டின் 20 சதவீதங்கொண்ட (ரூ. 176,770 இலட்சம்) உயர்வுடன் ஒப்பிடுகையில் 15.7 சதவீதங்கொண்ட (ரூ. 168,230 இலட்சம்) அதிகரிப்பைப் பதிவுசெய்தன. குறுங்கால நடுத்தரகால கொடுகடன்களின் அதிகரித்த செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்தக் கொடுகடனில் அத்தகைய கொடுகடனின் பங்கு 1992 இன் 83 சதவீதத்திலிருந்து 1993 இல் 87 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கடந்த காலத்தினைப்போன்றே, வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களில் பெருந்தொகையானவை வர்த்தக நடவடிக்கைகளினாலேயே ஈர்த்துக்கொள்ளப்பட்டன. இறக்குமதி மற்றும் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் செழிப்பினைப் பறைசாற்றும் விதத்தில் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான கொடுகடன் 28.6 சதவீதத்தினால் (ரூ. 134,430 இலட்சம்) உயர்வடைந்தது. இதன்பட்டி, மொத்தக் கொடுகடனில் இத்தகைய கொடுகடனின் பங்கு 1992 இன் 44 சதவீதத்திலிருந்து 1993 இல் 49 சதவீதத்திற்கு அதிகரித்தது. வழமையான தன்மையினை .உறுதிப்படுத்துகின்ற விதத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கான கொடுகடனில் 80 சதவீதம் குறுங்கால நிதியியல் கருவிகளின் வடிவிலேயே

* இப்பிரிவிற்கான பகுப்பாய்வு முதல் மூன்று காலாண்டுகளுக்கான தரவினை அடிப்படையாகக்கொண்டது.

அட்டவணை 1.66

## நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள்* 1992 – 1993

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | குறுங்காலம் (1 ஆண்டிற்கு குறைவான) | | நடுத்தரக்காலம் (1 தொக்கம் 5 ஆண்டுகள் வரை) | | நீண்டகாலம் (5 ஆண்டுகளுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) (7) இன் % ஆக (1) | (3) | (4) (7) இன் % ஆக (3) | (5) | (6) (7) இன் % ஆக (5) | (7) | (8) மொத்தத்தன் சத வீதமாக (7) |
| அ. வர்த்தகம் | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 42,514.9 | 80.4 | 7,299.1 | 13.8 | 3,052.0 | 5.8 | 52,866.0 | 45.7 |
| 1993 மாச்சு | 40,495.8 | 80.8 | 7,030.7 | 14.0 | 2,572.7 | 5.1 | 50,099.2 | 42.0 |
| 1993 யூன் | 43,098.7 | 81.7 | 7,224.9 | 13.7 | 2,396.6 | 4.5 | 52,720.2 | 43.2 |
| 1993 செத்தெம்பர் | 48,837.0 | 80.9 | 9,482.7 | 15.7 | 2,084.1 | 3.5 | 60,403.8 | 48.8 |
| ஆ. நிதியியல் | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 2,798.3 | 64.7 | 939.3 | 21.7 | 589.7 | 13.6 | 4,327.3 | 3.7 |
| 1993 மாச்சு | 3,722.1 | 68.1 | 859.6 | 15.7 | 886.0 | 16.2 | 5,467.7 | 4.6 |
| 1993 யூன் | 3,802.8 | 67.8 | 873.2 | 15.6 | 930.0 | 16.6 | 5,606.0 | 4.6 |
| 1993 செத்தெம்பர் | 2,511.4 | 64.3 | 636.1 | 16.3 | 758.9 | 19.4 | 3,906.4 | 3.2 |
| இ. வேளாண்மை | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 6,522.0 | 55.1 | 2,281.2 | 19.3 | 3,035.0 | 25.6 | 11,838.2 | 10.2 |
| 1993 மாச்சு | 7,200.4 | 53.8 | 2,333.7 | 17.4 | 3,841.0 | 28.7 | 13,375.1 | 11.2 |
| 1993 யூன் | 7,456.8 | 57.6 | 2,659.5 | 20.5 | 2,836.7 | 21.9 | 12,953.0 | 10.6 |
| 1993 செத்தெம்பர் | 4,830.3 | 52.5 | 3,800.0 | 41.3 | 565.7 | 6.2 | 9,196.0 | 7.4 |
| ஈ. கைத்தொழில்** | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 12,927.7 | 71.4 | 2,604.7 | 14.4 | 2,577.2 | 14.2 | 18,109.6 | 15.7 |
| 1993 மாச்சு | 13,864.2 | 70.8 | 3,013.4 | 15.4 | 2,712.7 | 13.8 | 19,590.3 | 16.4 |
| 1993 யூன் | 13,914.6 | 70.7 | 2,950.4 | 15.0 | 2,816.3 | 14.3 | 19,681.3 | 16.1 |
| 1993 செத்தெம்பர் | 12,149.2 | 70.8 | 2,518.3 | 14.7 | 2,496.5 | 14.5 | 17,164.0 | 13.9 |
| உ. சுற்றுலா | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 862.5 | 27.2 | 286.6 | 9.0 | 2,019.6 | 63.8 | 3,167.6 | 2.7 |
| 1993 மாச்சு | 819.1 | 26.7 | 360.2 | 11.7 | 1,890.0 | 61.6 | 3,069.3 | 2.6 |
| 1993 யூன் | 915.7 | 32.1 | 369.3 | 13.0 | 1,563.5 | 54.9 | 2,848.5 | 2.3 |
| 1993 செத்தெம்பர் | 878.5 | 51.3 | 436.9 | 25.5 | 398.0 | 23.2 | 1,713.4 | 1.4 |
| ஊ. வீடமைப்பு | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 2,784.2 | 20.6 | 3,219.8 | 23.8 | 7,504.1 | 55.6 | 13,508.1 | 11.7 |
| 1993 மாச்சு | 2,766.1 | 20.2 | 3,505.6 | 25.6 | 7,423.1 | 54.2 | 13,694.8 | 11.5 |
| 1993 யூன் | 2,840.6 | 19.4 | 3,886.3 | 26.5 | 7,913.5 | 54.1 | 14,640.4 | 12.0 |
| 1993 செத்தெம்பர் | 3,200.8 | 22.7 | 3,501.4 | 24.9 | 7,378.0 | 52.4 | 14,080.2 | 11.4 |
| எ. நுகர்வு | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 3,452.3 | 65.0 | 1,257.8 | 23.7 | 601.6 | 11.3 | 5,311.7 | 4.6 |
| 1993 மாச்சு | 3,644.3 | 66.8 | 1,124.2 | 20.6 | 684.2 | 12.5 | 5,452.7 | 4.6 |
| 1993 யூன் | 3,737.5 | 63.6 | 1,217.5 | 20.7 | 920.0 | 15.7 | 5,875.0 | 4.8 |
| 1993 செத்தெம்பர் | 3,641.4 | 62.2 | 1,249.3 | 21.3 | 961.4 | 16.4 | 5,852.1 | 4.7 |
| ஏ. ஏனைய கடன்கள் | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 2,711.2 | 41.6 | 1,974.1 | 30.3 | 1,829.3 | 28.1 | 6,514.6 | 5.6 |
| 1993 மாச்சு | 4,347.9 | 50.7 | 2,287.7 | 26.7 | 1,941.3 | 22.6 | 8,576.9 | 7.2 |
| 1993 யூன் | 3,971.3 | 50.8 | 2,102.3 | 26.9 | 1,741.4 | 22.3 | 7,815.0 | 6.4 |
| 1993 செத்தெம்பர் | 3,474.4 | 30.6 | 6,120.1 | 53.9 | 1,758.2 | 15.5 | 11,352.7 | 9.2 |
| ஐ. மொத்தம் | | | | | | | | |
| 1992 திசெம்பர் | 74,573.1 | 64.5 | 19,861.5 | 17.2 | 21,208.5 | 18.3 | 115,643.1 | 100.0 |
| 1993 மாச்சு | 76,859.9 | 64.4 | 20,515.1 | 17.2 | 21,951.0 | 18.4 | 119,326.0 | 100.0 |
| 1993 யூன் | 79,738.0 | 65.3 | 21,283.4 | 17.4 | 21,118.0 | 17.3 | 122,139.4 | 100.0 |
| 1993 செத்தெம்பர் | 79,523.0 | 64.3 | 27,744.8 | 22.4 | 16,400.8 | 13.0 | 123,668.6 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

** பொறியியல், கட்டட வர்த்தகம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கும்.

இருந்தன் வீடமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடனும் 1993 இல் 10.9 சதவீதம் (ரூ. 13,800 இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. எனினும், மொத்தக் கொடுகடனில் இதன் பங்கு 11.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வீடமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை நடுத்தர (1 – 5 ஆண்டுகள்), நீண்டகால (5 ஆண்டுகளுக்குமேல்) வகைகளிலேயே காணப்பட்டன.

1993 இல் வர்த்தக வங்கிகளிலிருந்து கைத்தொழில் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட கொடுகடன் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து (ரூ. 15,360 இலட்சம்) இத்துறையினால் ஈர்க்கப்பட்ட கொடுகடனின் பங்கினை 1992 இன் 17.5 சதவீதத்திலிருந்து 1993 இல் 13.9 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்தது. குறிப்பாக, 1993 இல் கைத்தொழில் நோக்கங்களுக்கான குறுங்கால, நடுத்தரக்கால கொடுகடன்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்கஅளவிற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் கடன்களையும் முற்பணங்களையும் பெற்ற முக்கிய வகைகளாக உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திக் கைத்தொழில்கள், புடவைகள், தாள் மற்றும் தாள் உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் என்பன காணப்பட்டன.

1993 இல் கடன்கள் மற்றும் முற்பணங்களின் உயர்ந்த செறிவுத் தன்மை 21.9 சதவீத வட்டிவீதத்தில் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் கடன்களும் முற்பணங்களும் 20.5 சதவீத வட்டிவீதத்தில் செறிந்து காணப்பட்டன. இதே போக்கினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நிறையேற்றப்பட்ட சராசரிக் கடன்வழங்கல் வீதம் 1992 இன் 19.5 சதவீதத்திலிருந்து 1993 இல் 20.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. முற்பணங்களின் பிணை அடிப்படையிலான பகுப்பாய்வின்படி அசையாச் சொத்துக்கள், கூட்டுப் பங்குக் கம்பனிகள், நம்பிக்கைப் பெறுகைகள், ஆவண உண்டியல்கள் மற்றும் வர்த்தகத்திலுள்ள இருப்புகள் என்பனவற்றிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன.

## மத்திய வங்கித்தொழில்

### பொதுவான போக்குகள்

பெருமளவு மூலதன உட்பாய்ச்சல்கள், மற்றும் திரண்ட சென்மதி நிலுவையின் உறுதியான முன்னேற்றம் என்பனவற்றின் பின்னணியில் மத்திய வங்கியின் தேறிய பன்னாட்டு ஒதுக்கு 1993 இறுதியில் ரூ. 457,250 இலட்சத்தினை அடைந்தது. இது முன்னைய ஆண்டினைவிட ரூ. 246,760 இலட்சம் அதிகமானதாகும். அதேவேளை மூலவள உட்பாய்ச்சலின் திரவத்தன்மையின் தாக்கத்தினைக் குறைக்கும் பொருட்டு மத்திய வங்கி அதன் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களைத் தீவிரமான திறந்தசந்தைத் தொழிற்பாடுகளினூடாக 1992 இறுதியின் ரூ. 238,100 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 107,420 இலட்சத்திற்குக் குறைத்துக்கொண்டது. பொறுப்புக்கள் பக்கத்தில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 17.9 சதவீதத்தினால் (ரூ. 54,530 இலட்சம்) உயர்வடைந்தவேளையில் மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 42.9 சதவீதத்தினால் (ரூ. 61,560 இலட்சம்) அதிகரித்தன. சொத்துக்கள் பொறுப்புக்கள் இரண்டிலும் ஏற்பட்ட இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நாணயத்தளம்

அட்டவணை 1.67

## பிணைகளின்படி முற்பணங்கள் * 1992 திசெம்பர் - 1993 செத்தெம்பர்

| விடயம் | 1992 திசெம்பர் 31 | | 1993 மாச்சு 31 | | 1993 யூன் 30 | | 1993 செத்தெம்பர் 30 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப.இ.ரூ) | மொத்தத்தின் % |
| 1. ஆவண உண்டியல்கள் ... | 6,794.3 | 5.9 | 7,595.0 | 6.4 | 8,887.8 | 7.3 | 8,402.8 | 6.8 |
| 2. அரச பிணைகள் ... | 1,774.1 | 1.5 | 1,915.9 | 1.6 | 1,893.1 | 1.5 | 2,613.7 | 2.1 |
| 3. கூட்டுப் பங்கு நிலையங்களின் பங்குகள், முறிகள், தொகுதிக் கடன்கள், ஆயுட் காப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய பல்வகை விடயங்கள் ... | 4,636.4 | 4.0 | 3,445.1 | 2.9 | 3,428.9 | 2.8 | 5,162.1 | 4.2 |
| 4. நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்களும் வைப்புச் சான்றிதழ்களும் ஆயுட் காப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய ஏனைய காசு வைப்புக்களும் ... | 13,330.0 | 11.5 | 12,322.1 | 10.3 | 11,426.5 | 9.4 | 9,612.9 | 7.8 |
| 5. வர்த்தக இருப்புக்கள் ... | 12,302.5 | 10.6 | 11,845.8 | 9.9 | 9,823.3 | 8.0 | 9,758.4 | 7.9 |
| 6. அசைவற்ற சொத்து, பொறித் தொகுதி, பொறி ... | 22,880.4 | 19.8 | 21,902.2 | 18.4 | 21,605.8 | 17.7 | 24,294.9 | 19.6 |
| 7. தனியாள் உத்தரவாதங்கள், வாக்குறுதிப் பத்திரங்கள் ... | 15,889.5 | 13.7 | 19,013.5 | 15.9 | 17,685.7 | 14.5 | 16,355.8 | 13.2 |
| 8. நம்பிக்கைப் பெறுகைகள் ... | 10,503.9 | 9.1 | 7,890.2 | 6.6 | 6,498.9 | 5.3 | 6,804.3 | 5.5 |
| 9. தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் ... | 1,736.2 | 1.6 | 1,148.1 | 1.0 | 1,000.9 | 0.8 | 1,074.1 | 0.9 |
| 10. உழவுப் பொறிகளும் - உந்து ஊர்திகளும் ... | 2,051.8 | 1.8 | 1,718.2 | 1.4 | 1,525.8 | 1.2 | 1,791.2 | 1.4 |
| 11. ஏனைய பிணைகள் ... | 14,675.6 | 12.7 | 21,485.3 | 18.0 | 28,099.8 | 23.0 | 27,049.9 | 21.9 |
| 12. பிணைகளற்றவை ... | 9,008.4 | 7.8 | 9,044.6 | 7.6 | 10,262.8 | 8.5 | 10,748.5 | 8.7 |
| மொத்தம் ... | 115,643.1 | 100.0 | 119,326.0 | 100.0 | 122,139.4 | 100.0 | 123,668.6 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

× சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களையும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகளை நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களையும் உள்ளடக்கும்.

(ஒதுக்கு நாணயம் அல்லது உயர்வலு நாணயம்) 1993 இறுதியில் ரூ. 564,670 இலட்சத்திற்கு 25.8 சதவீதத்தினால் (ரூ. 116,090 இலட்சம்) உயர்வடைந்தது.

## சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பு

1993 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 1,336,340 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 6 சதவீதம் (ரூ. 54,190 இலட்சம்) கொண்ட மிதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 32 சதவீதமான (ரூ. 323,800 இலட்சம்) அதிகரிப்பினைக்கொண்டிருந்தன. சொத்துக்கள் பக்கத்தில் இவ்வதிகரிப்பு முழுவதும் 1992 இறுதியில் ரூ. 403,870 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 766,940 இலட்சத்திற்கு உயர்வடைந்த வெளிநாட்டுச் சொத்துக்களில் பிரதிபலித்தது. வெளிநாட்டு அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைகள் வடிவில் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 288,430 இலட்சத்தினால் உயர்வடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 582,740 இலட்சமாக அமைந்தன. வெளிநாட்டிலுள்ள காசு நிலுவைகள் ரூ. 184,020 இலட்சமாக அமைந்து ரூ. 74,480 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இவ்வாண்டில் மத்திய வங்கியின் வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி வருவாய் 1992 இன் ரூ. 71,510 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 89,400 இலட்சமாக விளங்கியது.

அதேவேளை, மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 1993 இல் 6 சதவீதத்தினால் (ரூ. 39,270 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. மத்தியவங்கியின் சொத்துப்பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட தீவிரமான திறந்த சந்தைத்தொழிற்பாடுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச) அரச உத்தரவாதப் பிணைகளின் உடைமைகள் ரூ. 178,480 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. மாறாக மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் மற்றும் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள், அரசின் தேறிய வைப்பு நிலுவைகள் என்பனவற்றின் பேரிலான அரசிற்கான கொடுகடன் 1993 இல் ரூ. 46,540 இலட்சத்தினால் உயர்வடைந்தது. நிதிக்கூட்டு நிலையங்களுக்கான கடன்களில் அதிகரிப்புக்கள் காணப்பட்டபோதும் மத்தியவங்கியின் மீள் நிதியிடல் திட்டங்களின் பேரிலான திரண்ட கொடுகடனும் ரூ. 5,680 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 1993 இல் ஒதுக்குநாணய முகாமைத்துவத்தில் காணப்பட்ட மிகச்சாதகமானதொரு அபிவிருத்தியாக இருந்தது.

பொறுப்புக்கள் பக்கத்தில் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 60 சதவீதத்தினால் (ரூ. 116,300 இலட்சம்) உயர்வடைந்தமைக்கு ப. நா. நிதியத்தின் இரண்டாவது ஆண்டு அதிகரிக்கப்பட்ட அமைப்புச்சீராக்க வசதியின் கீழான பகிர்ந்தளிப்புக்களின் பேரிலான அதிகரித்த பொறுப்புக்களும் மத்திய வங்கியுடனான ப.நா. நிதியக் கணக்குகளின் ஆண்டு மீள் மதிப்புச் சீராக்கங்களும் காரணமாகும். அதேவேளை உள்நாட்டுப் பொறுப்புக்கள் 25 சதவீதத்தினால் (ரூ. 207,500 இலட்சம்) உயர்வடைந்தன. நியதி ஒதுக்குத் தேவைகளின் பேரிலான வர்த்தக வங்கிகளுக்கான பொறுப்புக்கள் ரூ. 61,410 இலட்சத்தினால் உயர்வடைந்தவேளையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 54,530 இலட்சத்தினால் அதிகரித்தது. மத்திய வங்கிப்பிணைகளை விற்பனை செய்வதன் மூலமாகத் திரவத்தன்மையினைக் களைந்துவிடும் முயற்சி ரூ. 21,550 இலட்சங்கொண்ட மேலதிகப் பொறுப்பினைத் தோற்றுவித்தது.

## நாணயக் கொள்கை

நாணயக்கூட்டுக்களில் ஏற்பட்ட உறுதியான உயர்ந்தளவு வளர்ச்சி, அதோடிணைந்த பணவீக்க அழுத்தங்கள் என்பனவற்றின் பின்னணியில் மத்திய வங்கியானது 1993 இல் நாணயக் கொள்கையினை மேலும் கடுமையாக்குவதற்காக அதன் கொள்கை நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தியது. அதன்படி, வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு விகிதம் பல தடவைகளில் உயர்த்தப்பட்டவேளையில் திரவத்தன்மை விரிவடைவதனைக் கட்டுப்படுத்துவதற்காகத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

வர்த்தக வங்கிகள் தனியார்துறைக்கு வழங்கிய கொடுகடனின் தொடர்ச்சியான உயர்ந்தளவு வளர்ச்சியும், வெளிநாட்டுச் சொத்துக்களின் உட்பாய்ச்சலில் இருந்து எழுந்த பெருமளவிலான திரவத்தன்மை வளர்ச்சியும் காரணமாக இவ்வாண்டில் நியதி ஒதுக்கு விகிதத்தின் தீவிரமான பயன்பாட்டினை நாடவேண்டியிருந்தது. இதன்படி 1993 சனவரி 29 இல் 13.5 சதவீதமாகக் குறித்தொதுக்கப்பட்ட ரூபா வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு விகிதம் 1993 ஏப்பிறலில் 14 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. வெளிநாட்டு நாணயத்திலான வைப்புக்களைப் பொறுத்தவரை தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு விகிதம் 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் கேள்வி வைப்புக்கள் மீதான விகிதம் 10 சதவீதமாகப் பேணப்பட்டது.

கொடுகடனில் ஏற்பட்ட தொடர்ச்சியான பெருமளவு விரிவாக்கத்தினைச் கருத்திற்கொண்டு ரூபா வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குவிகிதம் மேயில் 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டவேளையில் வெளிநாட்டு நாணயத்திலான தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் மீதானது 9 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. வெளிநாட்டு நாணய கேள்வி வைப்பு மீதான நியதி ஒதுக்கு விகிதம் 11 சதவீதமாகக் குறிக்கப்பட்டது. 1993 யூனில் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு விகிதம் 12 சதவீதமாக ஒருங்கிணைக்கப்பட்டது. 1993 ஓகத்தில் எல்லா வைப்புக்களினதும் மீதான ஒதுக்கு விகிதங்கள் 15 சதவீதத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு நியதி ஒதுக்கு விகிதத்தின் தாக்கம் கொள்கைக் கருவி ஒன்றாகப் பலப்படுத்தப்பட்டது. எனினும் சுமையினை இலகுபடுத்தும் பொருட்டு வர்த்தக வங்கிகள் வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கு எதிரான ஒதுக்குகளை வெளிநாட்டு நாணயத்தின் வடிவில் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

1993 இல் ஒதுக்குப் பணத்தை முகாமைப்படுத்துவதில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கு முக்கிய பொறுப்பு இடப்பட்டது. இதன்படி மத்திய வங்கியின் பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களைக் குறைப்பதற்கும் பொருளாதாரத்திலிருந்து திரவத்தன்மையை ஈர்ப்பதற்கும் முதலாந்தர, இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டன. எனவே திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு ஆண்டு முழுவதும் உயர்வாகக் காணப்பட்டது. மூன்றுமாத உண்டியல்கள் மீதான சராசரி விளைவு 1992 திசெம்பரில் 17.7 சதவீதத்திலிருந்து 1993 திசெம்பரில் 18.09 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமுன் 1993 செத்தெம்பரில் 20.84 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ்வாறே ஓர் ஆண்டுக்கான திறைசேரி உண்டியல் மீதான சராசரி விளைவு 19 சதவீதத்திலிருந்து 21.98 சதவீதத்திற்கு உயர்வடைந்து

ஆண்டு இறுதியில் 19.38 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. திறைசேரி உண்டியல்கள் மீதான உயர்வான விளைவுகளுக்கு இசைவாகத் திறைசேரி உண்டியல் சந்தையில் சந்தையின் பங்கேற்பு 1993 இல் உயர்வாகக் காணப்பட்டது. இவ்வாறாக வங்கியல்லாத்துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள் இவ்வாண்டில் ரூ. 201,020 இலட்சத்தால் உயர்வடைந்தன. மாறாக இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பினை ரூ.870,950 இலட்சத்திலிருந்து ரூ. 971,950 இலட்சத்திற்கு உயர்வடையச்செய்த புதிய திறைசேரி உண்டியல்களின் வழங்கல்களின் மத்தியிலும் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1992 இன் ரூ. 217,950 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 39,490 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

இதேவேளை, திறைசேரி உண்டியல்களுக்கான சந்தை அமைப்பினைப் பலப்படுத்துவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. பல தடவைகளில் முதிர்ச்சியடையும் உண்டியல்கள் காரணமாக எழும் திறைசேரி உண்டியல் வழங்கல்கள் முழுவதும், அரசின் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான புதிய வழங்கல்களும் திறைசேரி உண்டியல் சந்தைபற்றிய பூரணமான தகவலுடன் பொதுமக்களுக்கு ஏலத்தில் வழங்கப்பட்டன. இது சந்தையினால் தீர்மானிக்கப்பட்டவாறான திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவினைத் தோற்றுவிப்பதற்கு உதவியது. திறைசேரி உண்டியல் சந்தைகளின் தொழிற்பாடுகளில் சிறந்த கருத்துப் பரிமாற்றல் மற்றும் தெளிவாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி முதன்மை வணிகர்களுடன் ஒழுங்கான கூட்டங்களை நடாத்தியது. 1993 ஒற்றோபரில் திறைசேரி உண்டியல்களுக்கான மீள்கொள்வனவுச் சந்தை அறிமுகப்படுத்தப்பட்டமை திறைசேரி உண்டியல் சந்தையினைக் குறுங்காலத்தில் முடிவுறச் செய்வதற்கு உதவியதுடன் இது திரவத்தன்மையினை நாளாந்த அடிப்படையில் முகாமைப்படுத்துவதற்கும் உதவியது.

திறைசேரி உண்டியல் உடைமை குறைக்கப்பட்டமையின் பின்னணியில், ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1993 ஒற்றோபரில் இருந்து மத்தியவங்கி சொந்தப் பிணைகளின் வழங்கலை ஆரம்பித்தது. இதன்படி 3 மாதம் மற்றும் 6 மாத முதிர்ச்சிக்காலத்தில் வழங்கப்பட்ட மத்திய வங்கிப்பிணைகள் ஆண்டின் இறுதிப் பகுதியில் ரூ. 21,550 இலட்சத்தினைத் திரட்டின. வழங்கின. இப்பிணைகள் மீதான சராசரி விளைவும் 18.6 – 21.4 சதவீதவீச்சில் உயர்வாக விளங்கியது.

இதேவேளை ஒதுக்குப் பணம் விரிவடைவதனை மட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி மீள் நிதியிடல் கொடுகடன்களைத் தொடர்ந்து கட்டுப்படுத்தியது. இதன் விளைவாகக் குறுங்கால மீள்நிதியிடல், நநிகொ நிதியம் என்பனவற்றின் கீழான மொத்தவெளிநின்ற மீள் நிதியிடல் வீழ்ச்சியடைந்ததெனினும் நலிவுற்ற நிதிக்கூட்டு நிலையங்களிலிருந்தான மீள்நிதியிடலுக்கான சில கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வெளிநின்ற குறுங்கால மீள்நிதியிடல் 1992 திசெம்பர் இறுதியில் ரூ. 9,230 இலட்சத்திலிருந்து 1993 திசெம்பரில் ரூ. 7,520 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் மொத்த நநிகொ நிதியம் (நிதிக்கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள் நீங்கலாக) இதே காலப்பகுதியில் ரூ. 6,320 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. எனவே நிதிக்கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல்

1992 இன் ரூ. 18,110 இலட்சத்திலிருந்து 1993 திசெம்பரில் ரூ. 20,450 இலட்சத்திற்கு அதிகரித்தபோதிலும் மொத்த வெளிநின்ற மீள்நிதியிடல் 1993 இல் ரூ. 5,690 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது.

## வட்டி வீதங்கள்

உயர்வான நியதி ஒதுக்குத் தேவைகளினதும் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினதும் தாக்கத்தின்கீழ் 1993 ஒற்றோபர்வரை வட்டி வீதங்கள் மேல் நோக்கி அசைந்து உயர்வாக விளங்கின. எனினும் பொருளாதாரத்தில் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் கணிசமான திரவத்தன்மையினை உருவாக்கிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ஆண்டின் இறுதியில் குறுங்கால வட்டி வீதங்கள் குறைவடைவதற்குக் காரணமாயிருந்தன. இதேவேளை இவ்வாண்டில் குறுங்கால வட்டிவீதங்கள் பொதுவாக உயர்வாக விளங்கியமைக்கு இசைவாக நடுத்தர நீண்டகால வீதங்களும் ஆண்டு முழுவதும் உயர்ந்த மட்டங்களில் காணப்பட்டன.

### குறுங்கால வீதங்கள்

திரவத்தன்மை மற்றும் வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்கான திறைசேரி உண்டியல் மூலமான அரசின் பாரிய கடன்பாடுகள் என்பனவற்றை இல்லாமற் செய்யும் பொருட்டு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நடவடிக்கைகள் காரணமாக திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு குறிப்பாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் மேல் நோக்கி அசைந்தது. இதன் விளைவாக மூன்றுமாத முதிர்ச்சிக் காலத்தைக்கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு 1992 இறுதியின் 17.7 சதவீதத்திலிருந்து செத்தெம்பரில் 20.84 சதவீதத்திற்கு உயர்வடைந்து ஒற்றோபரிலிருந்து வீழ்ச்சிப்போக்கினைக் காட்டியது. இவ்வாறே 6 மாத, 12 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள் 1992 இறுதியில் முறையே 18.05 சதவீதத்திலும் 19.00 சதவீதத்திலுமிருந்து 1993 செத்தெம்பர் இறுதியில் 21.06 சதவீதத்திற்கும் 21.98 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. இதே போக்கினைப் பின்பற்றி இரண்டாந்தரச் சந்தையில் 3 மாத திறைசேரிஉண்டியல்கள் மீதான கழிவு மற்றும் மீள் கழிவு விளைவுகள் 1992 இறுதியின் 17.26 சதவீதத்திலும் 18.85 சதவீதத்திலும் இருந்து 1993 செத்தெம்பர் இறுதியில் முறையே 20.13 சதவீதத்திற்கும் 21.64 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. எனினும் ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய உயர்வான திரவத்தன்மை காரணமாக அக்காலப்பகுதியில் முதலாந்தர இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள் கீழ்நோக்கி அசைந்தன. முதலாந்தரச் சந்தையில் மூன்றுமாத உண்டியல்கள் மீதான விளைவு ஆண்டின் இறுதியில் 18.09 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறே ஓர் ஆண்டுக்கான திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவும் 19.38 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இதேவேளை, வங்கிகளிடையேயான அழைப்புப் பணச்சந்தையில் நிலவிய தவறான தளம்பல்களை இல்லாமற் செய்யும் பொருட்டு 1993 ஒற்றோபரில் திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச்சந்தை நிறுவப்பட்டதுடன் இது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒழுங்கான நடத்தையை வசதிப்படுத்தியது.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி

1993 ஒற்றோபரில் மீள்கொள்வனவுச் சந்தையில் 17.9 சதவீதமாக விளங்கிய வீதம் நவெம்பரில் 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தபின் ஆண்டின் இறுதியில் 16.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதேவேளை அழைப்புப் பணச்சந்தையில் 1992 இறுதியில் 10 - 32 சதவீத வீச்சிற்கிடையில் வேறுபட்ட வட்டிவீதங்கள் ஒற்றோபரில் 14.0 - 23.0 சதவீத வீச்சிற்கிடையில் குறுக்கமடைந்து 1993 இறுதியில் 16.5 - 28.0 சதவீத வீச்சிற்குள் விரிவடைந்தன. பெரும்பாலும் மீளக்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினால் வெளிநாட்டு நிதியங்களின் உட்பாய்ச்சலை இல்லாமற் செய்யும் பொருட்டு 1993 ஒத்தோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய வங்கிப் பிணைகள் மீதான வட்டி வீதங்கள் இதே போக்கினைப் பின்பற்றின. 6 மாத முதிர்ச்சியினைக்கொண்ட பிணைகள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 1993 ஒற்றோபரில் 21.44 ஆகவிருந்து ஆண்டினிறுதியில் 19.37 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

தேசிய சேமிப்பு வங்கியினால் வைப்புக்கள்மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 1993 திசெம்பர் 1 இல் வைப்பு வீதங்கள் கீழ்நோக்கித் திருத்தியமைக்கப்படும்வரை மாற்றமின்றியிருந்தன. 1990 யூலையிலிருந்து 16.2 சதவீதமாக விளங்கிய மாதாந்தம் வட்டி செலுத்தப்படும் 6 மாத வைப்புக்கள் மற்றும் 12 மாத வைப்புக்கள் மீதான வீதங்கள் 15.3 சதவீதத்திற்கு குறைக்கப்பட்ட வேளையில் முதிர்ச்சியின்போது வட்டி செலுத்தப்படும் 12 மாதநிலையான வைப்புக்கள் மீதான வீதம் 1 சதவீதப் புள்ளியால் 16.0 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதேவேளை 24 மாத வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வீதம் 18.5 சதவீதத்திலிருந்து 17.0 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டவேளையில் சேமிப்பு வைப்புக்கள் மீதான வீதம் மாற்றமின்றி 14.0 சதவீதமாக விளங்கியது. 1993 இன் பெரும்பகுதியில் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பிரதிபலித்த வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்கள் திறைசேரி உண்டியல்கள் மீதான குறைவான விளைவிற்கும் தேசிய சேமிப்பு வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கீழ்நோக்கிய திருத்தங்களுக்கும் இசைவாக ஆண்டின் இறுதிப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளின் தவணை வைப்பு வீதங்கள் ஆண்டிறுதியில் 10 - 19 சதவீத வீச்சில் வேறுபட்டவேளையில் சேமிப்பு வைப்புக்கள் மீதானவை 6 - 15 சதவீத வீச்சில் வேறுபட்டன. இவ்வாண்டில் குறுங்கால மற்றும் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதிய வசதிகளுக்குப் பொருந்துவதான மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வீதங்களில் எவ்வித மாற்றங்களும் காணப்படவில்லை. இதேவேளை வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கும் வீதம் 1992 இறுதியின் 20.2 சதவீதத்திலிருந்து 1993 இறுதியில் 20.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

**நீண்டகால வீதங்கள்**

நீண்டகால வட்டி வீதங்களானவை 2 - 5 ஆண்டுகள் முதிர்ச்சிக்காலத்தைக் கொண்ட அரச பிணைகள் மீதான வட்டி வீதங்கள் 1992 இல் நிலவிய 17 - 15 சதவீத வீச்சிலிருந்து ஆண்டின் இறுதியில் 18.5 - 16 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்து அதிகரித்துச்செல்லும் போக்கினைப் பிரதிபலித்தன. 1993 இல் 2-5 ஆண்டு முதிர்ச்சிக் காலங்களுடன் அரச பிணைகளின் பதினொரு வழங்கல்கள் மிதக்கவிடப்பட்டன. சனவரியிலிருந்து யூலை வரை வழங்கப்பட்ட நான்கு ஆண்டு பிணைகள் 16 சதவீத வட்டியைக் கொண்டிருந்தவேளையில் ஐந்தாண்டுப்பிணைகள்

16.5 சதவீத வட்டியைக் கொண்டிருந்தன. அதேவேளை யூலையிலிருந்து ஒற்றோபர் வரை வழங்கப்பட்ட பிணைகள் 17 சதவீதத்தினை வழங்கிய வேளையில் யூலையிலிருந்து வழங்கப்பட்ட இரண்டாண்டு முதிர்ச்சியைக்கொண்ட பிணைகள் 18.5 சதவீத வட்டிவீதத்தினைக் கொண்டிருந்தமை நடுத்தரக் காலத்தின் குறைந்த வட்டி எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ஆகிய மூன்று வர்த்தக வங்கிகளும் நான்கு மற்றும் ஐந்து முதிர்ச்சியாண்டுகளைக் கொண்ட வைப்புச் சான்றிதழ்களை வழங்கத் தொடங்கின. இவ்வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வட்டிவீதங்கள் 15 – 18 சதவீத வீச்சில் காணப்பட்டன.

அதேவேளை நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களின் கடன்வழங்கல் வீதங்கள் இவ்வாண்டிலும் பெரும்பாலும் தொடர்ந்து ஒரே மட்டத்திலேயே இருந்தன. முன்னைய ஆண்டினைப்போன்றே, வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமானப் புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் கடன் வழங்கல் வீதம் 20.5 சதவீதத்தில் அமைந்திருந்தது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கல் வீதம் 18.0 – 24.0 சதவீத வீச்சிற்கு 0.5 சதவீதப் புள்ளியினால் சிறிதளவு அதிகரித்தவேளையில், தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன்வழங்கல் வீதம் 13.7 – 20.5 சதவீத வீச்சிற்கிடையில் வேறுபட்டது. சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட மீள் நிதியிடல் வீதம் தொடர்ந்து 1993 இலும் குறைவானதாக 13.7 சதவீதத்திலேயே கா்ணப்பட்டது. அதேவேளை தேசிய சேமிப்பு வங்கியின் வீடமைப்புக் கடன்கள் தொடர்பான வட்டிவீதங்கள் இவ்வாண்டில் 18 – 22 சதவீத வீச்சிற்கிடையில் காணப்பட்டன. 1991 திசெம்பரிலிருந்து நீண்டகாலக் கொடுகடன்கள் மீது 20.5 சதவீதமான ஒரே வீதத்தினைத் தொடர்ந்து விதித்துவந்த அரசஈட்டு முதலீட்டுவங்கி 1993 ஒற்றோபரில் கடனின் அளவைப்பொறுத்து 20.5 – 22.0 சதவீத வீச்சிற்கு உயர்த்தியது.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

### கிளை விரிவாக்கம்

நாட்டில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை இவ்வாண்டில் 23 ஆக மாறாது காணப்பட்டது. கம்பகா மாவட்டத்தில் புதிய பிரதேச அபிவிருத்தி வங்கி ஒன்று திறந்து வைக்கப்பட்டதுடன், 1993 இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை 17 இற்கு உயர்வடைந்தது. இதேவேளையில் வங்கிக்கிளையமைப்பு இவ்வாண்டில் தொடர்ந்து விரிவடைந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் 30 புதிய கிளைகளை நிறுவியவேளையில் வெளிநாட்டு வங்கிகள் 4 புதிய கிளைகளைத் திறந்தன. இதன்காரணமாக வர்த்தக வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1992 இறுதியின் 811 இலிருந்து 1993 இறுதியில் 845 இற்கு உயர்வடைந்தது. இதே வேளையில் தேசிய சேமிப்பு வங்கி அதனது கிளைவலையமைப்பினை 85 இற்கு அதிகரித்தவேளையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 7 புதிய கிளைகளை

நிறுவின. இந்த அபிவிருத்திகளைத் தொடர்ந்து இவ்வாண்டில் வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,093 இற்கு அதிகரித்தது. இதன்படி வங்கித்தொழில் செறிவு ஒவ்வொரு 10,000 குடித்தொகைக்குமான வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை - 1992 இன் 0.6034 இலிருந்து 1993 இல் 0.6210 இற்கு அதிகரித்தது.

இலங்கை வங்கி அதனது தலைமையகக் கட்டடத்தில் அதன் இரண்டாவது கூட்டுக்கிளையினைத் திறந்ததுடன் ஐந்து வேளாண்மைப் பணி நிலையங்களை முழுமையான கிளைகளாகத் தரமுயர்த்தியது. 1993 இல் மூதூர்க் கிளை மீண்டும் திறக்கப்பட்டது. இதன்படி இலங்கை வங்கியின் முதன்மைக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1992 இன் 252 இலிருந்து 1993 இல் 259 இற்கு அதிகரித்தது. மேலதிகமாக, மக்கலம் வீதியில் உள்ள சிலோன் சிப்பிங் லயின்ஸ் களஞ்சியத்தில் விரிவாக்க அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டதுடன் விரிவாக்க அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 18 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும் ஐந்து வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் முதன்மைக் கிளைகளாகத் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து 1993 இறுதியில் கமநலசேவை நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 29 இற்கு வீழ்ச்சியடைந்தது. மக்கள் வங்கி தெகியத்தகண்டிய, கனேமுல்ல, யக்கல ஆகிய இடங்களில் கிளைகளைத் திறந்ததுடன் சேருநுவர, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள தனது கிளைகளை மீண்டும் திறந்து ஆண்டின் இறுதியில் அதனது கிளை வலையமைப்பினை 320 இற்கு அதிகரித்துக்கொண்டது.

வரையறுக்கப்பட்ட செலான் வங்கி இவ்வாண்டில் 11 புதிய கிளைகளைத் திறந்ததுடன் அதனது இரண்டு கிளைகளை முழுமையான கிளைகளாகத் தரமுயர்த்தி அதனது மொத்தக் கிளைகளை 57 இற்கு அதிகரித்துக்கொண்டது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி கம்பகா, தெகிவளை ஆகிய இடங்களில் இரண்டு புதிய கிளைகளைத் திறந்து அதனது கிளைவலையமைப்பை 18 ஆக அதிகரித்துக்கொண்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி கந்தானை, மருதானை, அக்குர ஆகிய இடங்களில் 3 புதிய கிளைகளை நிறுவியதுடன் அதனது கிளைவலையமைப்பினை 31 இற்கு விரிவாக்கிக் கொண்டது. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் கிராண்ட்பாஸ், தம்புள்ள, கம்பகா, ஹொரன ஆகிய இடங்களில் 4 புதிய கிளைகளைத்திறந்து அதனது கிளைவலையமைப்பை 51 இற்கு அதிகரித்துக் கொண்டது.

முன்னைய ஆண்டின் அதே போக்கினைத் தொடர்ந்து இவ்வாண்டில் வெளிநாட்டு வங்கிகள் 4 கிளைகளைத் திறந்தன. ஏஎன்இஸட் கிறின்லேஸ் வங்கி பீஎல்சீ மொரட்டுவை, ராஜகிரிய, கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் 3 கிளைகளைத்திறந்து அதனது கிளைவலையமைப்பை 7 இற்கு அதிகரித்துக்கொண்டது. கொழும்பு 7 இல் புதிய கிளையொன்றை நிறுவியதுடன் ஏபீஎன் அம்ரோ வங்கி என்.வி அதனது கிளைகளின் எண்ணிக்கையை 2 ஆக அதிகரித்துக்கொண்டது.

கம்பகா மாவட்டத்தில் புதிய பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கியொன்று நிறுவப்பட்டதைத் தொடர்ந்து 1993 இல் பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 17 இற்கு அதிகரித்தது. கிராமிய நடவடிக்கைகளை அதிகரிக்கும் வகையில் கிராமியப் பிரதேசங்களில் 7 வங்கித்தொழில் கிளைகளை நிறுவியதன் மூலம் பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது கிளை

அட்டவணை 1.68

**வங்கிக் கிளைகளின் பரம்பல் 1991 – 1993**

| வகை | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை ... | 38 | 39 | 40 |
| 1.1 வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ... | 23 | 23 | 23 |
| 1.1.1 உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 6 | 6 | 6 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 17 | 17 | 17 |
| 1.2 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) ... | 15 | 16 | 17 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை (ஆ) ... | 967 | 1,051 | 1,093 |
| 2.1 வர்த்தக வங்கி கிளைகளின் எண்ணிக்கை ... | 762 | 811 | 845 |
| 2.1.1 உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (இ... | 737 | 782 | 812 |
| 2.1.1.1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை ... | 36 | 34 | 29 |
| 2.1.2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | 25 | 29 | 33 |
| 2.2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் எண்னிக்கை ... | 124 | 156 | 163 |
| 2.3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 81 | 84 | 85 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) 1985 இன் எண் 15 கொண்ட பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலகங்கள் உட்பட.

(இ) விரிவாக்க அலுவலங்கள்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டுக் கிளைகள் உட்பட, ஆனால், தலைமையலுவலக கிளைகளின் விரிவாக்க அலுவலகத்தில் இருக்கும் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் நீக்கலாக.

வலையமைப்பினை விரிவாக்கின. இதன் விளைவாக 1993 இன் இறுதியில் பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 163 ஆக விளங்கியது. மேலதிகமாக அநுராதபுர பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கி நெகம்பக, சியம்பலான்கமுவ ஆகிய இடங்களில் இரண்டு இடம்பெயர் வங்கித்தொழில் அலகுகளை நிறுவியவேளையில் நுவரெலியா பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிராமிய வங்கித்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கரலியத்த என்ற இடத்தில் இடம்பெயர் வங்கித்தொழில் அலகு ஒன்றை நிறுவியது.

1993 இல் தேசிய சேமிப்பு வங்கி வத்தளையில் புதிய கிளை ஒன்றைத்திறந்து அதனது கிளைகளின் எண்ணிக்கையை 85 இற்கு அதிகரித்தது. மேலதிகமாக அநுராதபுரம் புதிய நகரத்தில் பன்முகப்படுத்தப்பட்ட அஞ்சல் அலகு ஒன்றும் மொரவக்க என்ற இடத்தில் அக்குரச கிளையின் துணை அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டன.

## முகவர் வங்கித் தொழில்

1993 இல் மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின் ஊடாக இரு அரச வங்கிகளும் தொடர்ந்தும் முகவர் வங்கித்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

1993 இல் 208 மக்கள் கடன் முன்னோடிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஆண்டின் இறுதியில் இலங்கை வங்கியினால் நியமிக்கப்பட்ட மக்கள் கடன் முன்னோடிகளின் மொத்த எண்ணிக்கை 3,797 ஆக விளங்கியது. மக்கள் வங்கியும் தொழிற்படாத 721 மக்கள் கடன் முன்னோடிகளின் பணிகளை அகற்றிய வேளையில் 269 மக்கள் கடன் முன்னோடிகளை நியமனம் செய்தது. இதன்படி 1993 திசெம்பர் இறுதியில் தொழிற்பட்ட மக்கள் கடன் முன்னோடிகளின் மொத்த எண்ணிக்கை 1992 இன் 6,905 இலிருந்து 6,453 இற்கு வீழ்ச்சியடைந்தது. இத்திட்டதின்கீழ் 1993 இறுதியில் வெளிநின்ற மொத்தக் கொடுகடன் ரூ. 3,033 இலட்சமாக விளங்கி 1992 இன் ரூ. 92 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 191 இலட்ச அதிகரிப்பினைக் காட்டியது. இதேவேளையில் மக்கள் வங்கி, இத்திட்டத்தின் கீழான அதனது வசதிகளை ரூ. 324 இலட்சத்தினால் அதிகரித்து 1993 இறுதியில் வெளிநின்ற கடன் தொகையை ரூ. 2,024 இலட்சத்திற்கு அதிகரிக்கச் செய்தது.

இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சம்பத் தொழில் வழுங்குநர் திட்டத்தின் கீழ் ரூ. 106,000 இனை வழங்கியது. 1993 இறுதியில் இந்தத் திட்டத்தின் கீழ் மொத்த வெளிநின்ற மொத்தத் தொகை 70 சம்பத் தொழில் வழுங்குநர் சார்பில் ரூபா 120 இலட்சமாக விளங்கியது.

## பணி வசதிகள்

புதிய வைப்புத் திட்டங்கள் மற்றும் கடன் திட்டங்கள், கொடுகடன் அட்டைகள், தன்னியக்க ரெலர் பொறிகள், வெளிநாட்டுச் செலாவணி வங்கித் தொழில் வசதிகள், மின் பணமாற்றல் வசதிகள் என்பனவற்றினூடாக வர்த்தக வங்கிகள் தமது பணி வசதிகளை விரிவாக்கின.

பெண்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட "வனிதா வாசனா கினும்" மற்றும் பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய சமயக் குழுக்களுக்கான மூத்த பிரசைகளின் யாத்திரிகர் கணக்குப் போன்ற, லொத்தர்முறைகளுடன் இணைக்கப்பட்ட புதிய இரண்டு சேமிப்பு வைப்புத் திட்டங்களை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியது. மேலதிகமாக வைப்புக்களின் சேகரிப்புக்களைச்செறிவுபடுத்தும் நோக்கில் கைமாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் நீடிக்கப்பட்ட (சிறுவர்) கணக்குகள் என்பனவற்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் மக்கள் வங்கி அதனது வைப்புத் திட்டங்களை மேலும் கவர்ச்சிகரமாக்கியது. தமது வீடுகளுக்கு மின்வலுவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக மக்கள் வங்கி தோட்டத் தொழிலாளர்களுக்கான புதிய கடன் திட்டமொன்றையும் தொடக்கி வைத்தது. இலங்கை வங்கியுடன் வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு தமது வைப்புக் கணக்குகளில் இடப்பட்ட தொகையின் 5 மடங்கு வரையில் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு இயலச் செய்யும் வகையில் இலங்கை வங்கி வரையறை வர்த்தக முறையொன்றினை அறிமுகப்படுத்தியது. வரையறை வர்த்தகத்துக்கான குறித்துரைக்கப்பட்ட நாணயங்களாவன ஐக்கிய அமெரிக்க டொலர்கள், ஸ்டேர்லிங் பவுண்கள், டியூச் மாக்கு, யப்பானிய யென், சுவிஸ் பிராங்கு, அவுத்திரேலியா டொலர் என்பனவாகும். மேலதிகமாக 1993 இல் சிறு தொழில் முயற்சியாளர் அபிவிருத்திக்கான அனைத்தையும்

உள்ளடக்கிய கடன் திட்டம் மற்றும் தெங்கு வளமாக்கி கடன் திட்டம் போன்ற இரண்டு புதிய கடன் திட்டங்கள் இலங்கை வங்கியினால் தொடக்கி வைக்கப்பட்டன.

இதேவேளையில், வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, கணக்கு வைத்திருப்பவர்களின் பெற்றோரின் வயோதிப காலத்தின்போது உதவுவதற்காக வேண்டி "அட்டன் நசனல் வங்கி பெற்றோர் கவனிப்புத் திட்டம்" என்ற புதிய வைப்புத் திட்டமொன்றைத் தொடக்கி வைத்தது. மேலதிகமாக அட்டன் நசனல் வங்கி அதிக வைப்புக்களைக் கவரும் நோக்கில் "பத்தும் விமன" என்ற பெயரிலான சேமிப்புச் சீட்டிழுப்பு வைப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. அட்டன் நசனல் வங்கி ரூ. 50,000 கடன் வரையறையினைக் கொண்ட அதனது அட்டன் நசனல் வங்கி மாஸ்டர் கார்ட்டிற்கு மேலதிகமாக ரூ. 300,000 கடன் வரையறையினைக் கொண்ட கோல்ட் மாஸ்டர் கார்ட்டினையும் அறிமுகப்படுத்தியது.

இவ்வாண்டில், வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் "உபகார ஓய்வூதிய திட்டம்" சுவர்ண திலின ஜயபத" ஆகிய இரண்டு புதிய வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. உபகார ஓய்வூதியத் திட்டமானது கணக்கு வைத்திருப்பவர்களின் பெற்றோர்களின் நன்மை கருதித் தொடக்கி வைக்கப்பட்டது. தவணை முடிவின்போது வைப்பின் நன்மை பெறுநரானவர் மாத வைப்புக்குச் சமமானதொரு தொகையினை மாத ஓய்வூதியமாகப் பெறுவதற்கு உரித்துடையவராவார். சுவர்ண திலின ஜயபத சான்றிதழ்கள் ரூ. 1,000 இனங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளதோடு ஒவ்வொரு சான்றிதழும் லொத்தர் சீட்டிழுப்புக்களுக்கு உரித்துடையதாகும். இதேவேளையில் இவ்வாண்டில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், சனசக்தி நம்பிக்கை நிதிய கடன் திட்டம், குறைந்தவருமான வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டம் எனப் பெயரிடப்பட்ட மூன்று கிராமியக் கொடுகடன் திட்டங்கள் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியினால் இவ்வாண்டில் தொடக்கி வைக்கப்பட்டன.

வரையறுக்கப்பட்ட செலான் வங்கியும் "திமுதுபத" என்ற பெயரில் புதிய வைப்புத் திட்டமொன்றைத் தொடக்கிவைத்தது. இந்தத் திட்டமானது வைப்பாளர்களுக்கு தாம் வைப்பிலிட்ட தொகையின் 85 சதவீதம் வரையில் கடன்பெற இயலச் செய்வதோடு பரிசுச் சீட்டிழுப்பு ஒன்றில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது. இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கி மேற்கத்தைய ஒன்றிய பணமாற்றல் பணியில் சேர்ந்து கொண்டது. இதன்கீழ் முக்கிய சருவதேச பிரதான நகரங்களிலிருந்தும் அவற்றிற்கும் வெளிப்பணவனுப்பல், உட்பணவனுப்பல் என்பனவற்றை மேற்கொள்ள முடியும். மேலும் வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, வெளிநாட்டு நாணயத்தில் தீர்வையற்ற தங்க விற்பனைக்காக கொழும்பு சருவேதச விமான நிலையத்தில் விற்பனை நிலையமொன்றையும் நிறுவியது.

இவ்வாண்டில் "எபிஎன் அம்ரோ மாஸ்டர் காட்" என்ற பெயரில் ஏபிஎன் அம்ரோ வங்கி கடன் அட்டையொன்றை அறிமுகப்படுத்தியது. ஏஎன்இசட் கிறின்லேஸ் வங்கி பீஎல்சீ முறையே ஆகக்குறைந்தது ரூ. 100,000/ உம், ரூ. 50,000/ உம் வைப்புக்களைக் கொண்ட "சுப்பர் சேவிங்ஸ் எக்கவுண்ட்" மற்றும் "ஹய் பர்போமன்ஸ் சேவர் சேவிங்ஸ் எக்கவுண்ட்" என்ற பெயர்களில் புதிய இரண்டு வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. ஏஎன்இசட் கிறின்லேஸ் வங்கி

பீஎல்சீ "சுவிப்ட்" என்ற சருவதேச அமைப்புடன் இணைந்துகொண்டதோடு (உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதித் தொலைத்தொடர்புச் சங்கம்) இது நிதியங்களின் மின் மூலமான மாற்றத்திற்கும், உள்வரும் நிதியங்களை வாடிக்கையாளர்களின் கணக்கில் உடனடியாக வரவு வைப்பதற்கும் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை விரைவாக செயற்படுத்துவதற்கும் வசதிகளை வழங்குகின்றது.

உலகளாவிய வைப்புப் பற்றுச் சீட்டுக்களினதும் அமெரிக்கன் வைப்புப் பற்றுச் சீட்டுக்களினதும் வழங்கலில் வரையறுக்கப்பட்ட ஜோன் கீல்ஸ் உடைமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய ஒப்புரவு வழங்கல்களிற்கான பாதுகாவலனாக சிற்றி பேங்க் என் ஏ நியமிக்கப்பட்டது. மேலும், தெரிந்தெடுக்கப்பட்ட சில வாடிக்கையாளர்களுக்கு காசு முகாமைத்துவ பணிகளை வழங்குவதற்கு சிற்றிபேங்க் மென்கலக் கணனி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. 1993 இல் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி ரூபா வங்கியாளர்களின் ஏற்பு என்ற புதிய நாணயச் சந்தைக் கருவியொன்றினை அறிமுகப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் வங்கித் தொழில் கூட்டுத்தாபனம் அவர்களது வாடிக்கையாளர்களினால் சருவதேச தன்னியக்கத் ரெலர் பொறி அட்டை வலையமைப்பு ஒன்றிலிருந்து இலங்கையிலுள்ள கொங்கொங் வங்கியில் தமது கணக்கினை அணுகுவதற்குப் பயன்படுத்தும் பொருட்டு புதிய சருவதேசத் தன்னியக்க ரெலர் பொறி அட்டை ஒன்றினை அறிமுகப்படுத்தியது.

வர்த்தக வங்கிகளினால் வழங்கப்படும் தன்னியக்க ரெலர் பொறி வலையமைப்பு வசதிகளை அதிகரிக்கும் வகையில் இவ்வாண்டில் 13 தன்னியக்க ரெலர் பொறிகள் நிறுவப்பட்டன. அதன் விளைவாக, 1993 இன் இறுதியில் நாட்டில் தொழிற்படுத்தப்பட்ட தன்னியக்க ரெலர் பொறிகளின் மொத்த எண்ணிக்கை 79 ஆக விளங்கியது. இதேவேளையில் அட்டன் நசனல் வங்கியும் மக்கள் வங்கியும் காசுலைன் மற்றும் பெற் என்ற தமது தன்னியக்கக் கூற்றுப் பொறி வலையடைப்பைப் பகிர்ந்துகொண்டு வங்கிகளுக்கிடையிலான பொது வலையமைப்பு ஒன்றைத் தொடக்கி வைத்தன. கூட்டாகப் பணிபுரியும் இத்தன்னியக்க ரெலர் பொறிகள் காசுலைன் மற்றும் பெற் அட்டைகளை வைத்திருப்போர் அட்டன் நசனல் வங்கியினாலும் மக்கள் வங்கியினாலும் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் தன்னியக்கக் ரெலர் பொறி ஒன்றில் தமது வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுவதற்கு இயலச் செய்கின்றது.

## இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

பங்குடைமையாளர்களான கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு கடன் பெறுநர்கள் மற்றும் எதிர்காலக் கடன் பெறுநர்கள் பற்றிய கடன் அறிக்கைகளை வழங்கும் பணிகளைப் பேணுவதன் மூலம் கொடுகடன் தகவல் பணியகம் 1993 இலும் தொழிற்பாட்டிலிருந்தது. தகவலின் உள்ளடக்கமும் அறிக்கைகளின் வழங்கலும் கடனுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதேவேளையில் கடன் தகவல்மீதான தரவுத்தளம் இவ்வாண்டில் மேலும் விருத்தி செய்யப்பட்டது.

தரவுத்தளத்தில் உள்ளடக்குவதற்காகத் தீர்மானிக்கப்பட்ட கடன் கணக்குகளின் ஆகக்குறைந்த வரையறை ஒழுங்கற்ற கடன் கணக்குகளைப் பொறுத்தவரை ரூ. 100,000/- ஆகவும் முறையாகச் செலுத்தப்படும் கடன் கணக்குகளுக்கு ரூ. 500,000/-ஆகவும் மாறாது காணப்பட்டது. ஆனால் ஒழுங்கற்ற கடன் கணக்கு புது நிலைப்படுத்தும் காலம் 1993 சனவரியிலிருந்து செயற்படும் வகையில் ஆறுமாதங்களிலிருந்து ஒரு மாதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதன்மூலம் உடனுக்குடன் புதுநிலைப் படுத்தப்பட்ட தகவல்களைக் கொண்ட கடன் அறிக்கைகளை வழங்குவதற்குப் பணியகத்துக்கு இயலுமாகக் காணப்பட்டது. பணியகம் 1992 இன் 49,577 அறிக்கைகளுக்கு எதிராக 1993 இல் 58,657 கடன் அறிக்கைகளை வழங்கிய வேளையில் கடன் அறிக்கைகள் தொடர்பாக தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அதே தகவல் உள்ளடக்கத்தைப் பேணியது. 1993 இன் இறுதியில் தரவுத்தளம் 19,001 ஒழுங்கற்ற கடன் கணக்குளையும், 23,482 ஒழுங்காகச் செலுத்தப்படும் கடன் கணக்குகளையும் உள்ளடக்கிய தகவல்களைக் கொண்டிருந்தது.

பணியகத்தின் வழங்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ரூ. 100/ கொண்ட 250,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ரூ. 250 இலட்சத்தில் மாறாது காணப்பட்டது. 1993 இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 23 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், 24 பதியப்பட்ட நிதிக் கம்பனிகள், இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றை உள்ளடக்கிய 52 பங்குடமையாளர்களைக் கொண்டிருந்தது.

## கிராமிய வங்கித்தொழிலும் கொடுகடனும்

1993 ஆம் ஆண்டு, கிராமியத் துறையின் பொருளாதார நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக அத்துறைக்கான கடன் பகிர்ந்தளிப்புக்களில் அதிகரிப்பொன்றினைக் கண்டது. கிராமியத்துறைக்கான கடன் வசதிகள் முக்கியமாக இலங்கை மத்திய வங்கியின் கிராமிய கொடுகடன் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம், நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியம், கிருண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம், சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் மத்தியநில நீண்டகாலப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம், வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டம், தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், வடமேல் மாகாண நீர்வள அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்ற கடன் திட்டங்களினூடாக வழிப்படுத்தப்பட்டன.

### புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

1993 இல் இத்திட்டத்தின் கீழ் அதிகரித்த கடன் பகிர்ந்தளிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. 1993 இன் கடன் பகரிந்தளிப்புக்கள் ரூ. 9,210 இலட்சமாக விளங்கி 6.5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் 1992 இன் 62,355 இலிருந்து 1993 இல் 63,839 இற்கு அதிகரித்து 2.4 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் முக்கிய பாகமொன்று

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன்
(31.12.1993 இல்

| போகம் | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் |
| 1989/90 பெரும் போகம் | 76.4 | 17.5 | 93.9 | 92.2 | 59.5 | 151.7 | 13.7 | 2.9 | 16.6 |
| 1990 சிறு போகம் | 54.1 | 47.9 | 102.0 | 71.4 | 41.1 | 112.5 | 1.5 | 8.2 | 9.7 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1990 | 130.5 | 65.4 | 195.9 | 163.6 | 100.6 | 264.2 | 15.2 | 11.1 | 26.3 |
| 1990/91 பெரும் போகம் | 165.3 | 20.4 | 185.7 | 228.4 | 52.2 | 280.6 | 13.0 | 3.9 | 16.9 |
| 1991 சிறு போகம் | 66.3 | 88.8 | 155.1 | 103.9 | 57.4 | 161.3 | 3.1 | 12.9 | 16.0 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1991 | 231.6 | 109.2 | 340.8 | 332.3 | 109.6 | 441.9 | 16.1 | 16.8 | 32.9 |
| 1991/92 பெரும்போகம் | 185.4 | 28.7 | 214.1 | 179.7 | 65.0 | 244.7 | 18.0 | 5.4 | 23.4 |
| 1992 சிறுபோகம் | 38.6 | 31.8 | 70.4 | 57.0 | 24.8 | 81.7 | 0.9 | 3.9 | 4.8 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1992 | 224.0 | 60.5 | 284.5 | 236.7 | 89.8 | 326.4 | 18.9 | 9.4 | 28.3 |
| 1992/93 பெரும்போகம் | 155.2 | 32.4 | 187.6 | 159.4 | 56.7 | 216.1 | 15.6 | 15.2 | 30.8 |
| 1993 சிறு போகம் | 61.4 | 47.7 | 109.1 | 78.7 | 28.0 | 106.7 | 1.1 | 4.4 | 5.5 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1993 | 216.6 | 80.1 | 296.7 | 238.1 | 84.7 | 322.8 | 16.7 | 19.6 | 36.3 |

## திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள்

உள்ளவாறு)

(ப.இ. ரூபாய்களில்)

| பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி | | | இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | | | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | | | மொத்தக் கடன்கள் | | பு.அ.உ.கி. கொ. தி. கீழ் மொத்தக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | |
| 23.2 | 13.9 | 37.1 | – | – | – | – | – | – | – | – | – | 205.5 | 93.8 | 299.3 |
| 28.1 | 29.1 | 57.2 | – | 0.1 | 0.1 | – | 0.1 | 0.1 | – | – | – | 155.1 | 126.5 | 281.6 |
| 51.3 | 43.0 | 94.3 | – | 0.1 | 0.1 | – | 0.1 | 0.1 | – | – | – | 360.6 | 220.3 | 580.9 |
| 105.0 | 27.6 | 132.6 | 0.2 | 0.1 | 0.3 | – | – | – | – | – | – | 511.9 | 104.2 | 616.1 |
| 49.1 | 53.9 | 103.0 | – | 0.5 | 0.5 | – | – | – | – | – | – | 222.4 | 213.5 | 435.9 |
| 154.1 | 81.5 | 235.6 | 0.2 | 0.6 | 0.8 | – | – | – | – | – | – | 734.3 | 317.7 | 1,052.0 |
| 100.3 | 49.3 | 149.6 | – | – | – | – | – | – | 0.4 | 0.1 | 0.5 | 483.8 | 148.5 | 632.2 |
| 37.6 | 37.7 | 75.3 | – | 0.3 | 0.3 | – | – | – | – | – | – | 134.0 | 98.5 | 232.5 |
| 137.9 | 87.0 | 224.9 | – | 0.3 | 0.3 | – | – | – | 0.4 | 0.1 | 0.5 | 617.8 | 247.1 | 864.9 |
| 86.5 | 80.6 | 167.1 | 1.6 | 0.2 | 1.8 | – | – | – | – | – | – | 418.3 | 185.2 | 60.34 |
| 42.8 | 50.7 | 93.5 | 1.2 | 1.1 | 2.3 | – | – | – | – | – | – | 185.2 | 131.9 | 317.1 |
| 165.6 | 131.3 | 296.9 | 2.9 | 1.3 | 4.2 | – | – | – | – | – | – | 639.9 | 317.1 | 957.0 |

மூலங்கள் : மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி.
இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

அட்டவணை 1.70

## வைப்புக்களும் முற்பணங்களும் - கிராமியத்துறை*

(ரூ.'000)

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள்*** | | வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் | | பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1992 | 1993 | 1992 | 1993 | 1992 | 1993 |
| 1 மொத்தச் சேமிப்புக்கள் ... | 4,333,051 | 5,196,746 | 287,254 | 366,578 | 666,561 | 1,099,420 | 696,829 | 1,415,452 |
| 1.1 சேமிப்புக்கள் ... | 3,930,578 | 4,665,514 | 222,747 | 315,010 | 586,943 | 979,040 | 553,437 | 1,033,605 |
| 1.2 சிறப்புச் சேமிப்புக்கள் ... | - | - | 21,590 | 8,818 | - | - | 90,458 | 254,014 |
| 1.3 நிலையான வைப்புக்கள் ... | 402,473 | 531,232 | 42,917 | 42,750 | 79,618 | 120,380 | 52,934 | 127,833 |
| 2 வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** ... | 595,579 | 538,881 | 134,214 | 233,270 | 703,235 | 966,438 | 715,120 | 1,086,011 |
| 2.1 வேளாண்மை ... | 77,769 | 67,495 | 50,793 | - | 321,054 | 422,231 | 188,465 | 296,188 |
| 2.2 விலங்கு வளர்ப்பு ... | 38,764 | 33,611 | 1,106 | - | 32,800 | 31,880 | 45,972 | 25,562 |
| 2.3 மீன்பிடி ... | | - | 6 | - | 12,925 | 22,026 | - | - |
| 2.4 சிறு கைத்தொழில் ... | 34,916 | 32,908 | 1,178 | - | 81,517 | 99,528 | 91,986 | 38,975 |
| 2.5 வீடமைப்பு, மின்னூட்டல் நீர் வழங்கல் ... | 256,360 | 264,208 | 6,243 | - | - | - | 249,210 | 76,361 |
| 2.6 செயற்றிட்ட/வர்த்தகம் ... | 102,551 | 62,813 | 49,638 | - | 113,023 | 178,250 | 34,326 | - |
| 2.7 ஏனையவை ... | 85,219 | 77,846 | 25,250 | - | 141,916 | 212,523 | 105,161 | 648,925 |

* கிராமியப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் கிளைகள் மீதான நிலைமைகள் நீக்கலாக.
** இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி.
*** கூட்டுறவு கிராமிய வங்கிகளின் வைப்புக்கள் 30 செத்தெம்பரில் உள்ளவாறு தரப்பட்டுள்ளன.

மூலங்கள் : மக்கள் வங்கி
இலங்கை வங்கி.
பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள்.

நெற் பயிர்ச் செய்கைக்கானதாக விளங்கியதோடு 1993 இல் வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் 66 சதவீதத்திற்கும் வகைகூறியது. எஞ்சிய 34 சதவீதமும் துணை உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கைக்கானதாக இருந்தது. 1993 இல் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளே இத்திட்டத்தின் கீழான கடன்களின் அதிகரித்த கேள்விக்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணிகளாக விளங்கின.

1993 இல் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் மீளச்செலுத்தத்தவறியவர்களின் சார்பில் மத்திய வங்கியினால் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத்தொகை ஏறத்தாழ ரூ. 380 இலட்சமாக விளங்கியதுடன் 1993 இறுதியில் இழப்பீடாகச் செலுத்தப்பட்ட மொத்தத்தொகை ரூ. 1,010 இலட்சத்திற்கு அதிகரித்தது. இத்தகைய இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள் வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களில் 50 சதவீதத்திற்கு வகைகூறின.

### நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியம் வகை - 1

1991 திசெம்பர் 23 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் நடுத்தரகால, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திலிருந்தான மீள்நிதியிடல் இடை நிறுத்தப்பட்டமைத் தொடர்ந்து நடுத்தரகால நீண்டகாலக் கொடுகடன்திட்டத்தின் கீழான கடன்திட்டம், 1993 இல் தொழிற்படவில்லை. எனினும், இவ்வாண்டில் பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மீள்நிதியிடல் வழங்கப்பட்டது. இக்கடன் திட்டத்தின் கீழ் 1993 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த மீள்நிதியிடல் ரூ. 340 இலட்சமாக விளங்கியது.

### வேளாண்மைக் காப்புறுதிச் சபை

1993 இல் வேளாண்மைக் காப்புறுதிச்சபை கிட்டத்தட்ட 34,000 எக்டேயர்களைக் காப்புறுதி செய்ததோடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 13 சதவீத வீழ்ச்சியாக இருந்தது. எனினும் 1993 இல் காப்புறுதி செய்யப்பட்ட பரப்பின் மீது சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் ரூ. 150 இலட்சமாக விளங்கி 26 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. 1993 இல் செலுத்தப்பட்ட இழப்பீடு ஏறத்தாழ ரூ. 60 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 14 சதவீத வீழ்ச்சியைக் குறித்துக்காட்டியது.

### கிராமியத்துறைக்கான கொடுகடன் வசதிகள்

கிராமியத்துறைக்கான கொடுகடன் முக்கியமாகக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் (கூ.கி.வ.), வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கித் துணை அலுவலகங்கள் (வே.ப.நி), பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பி.கி.அ.வ.), சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் (சி.கொ.கூ.ச) ஆகியவற்றினூடாக வழங்கப்பட்டது. 1993 இல் இந்நிறுவனங்களினால் கிராமியத் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு ரூ. 2.82 பில்லியனாக விளங்கியது. கடந்த ஆண்டிற்கான ரூ. 2.15 பில்லியன்கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் இது 31.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

### கிராமிய சேமிப்புக்களைத் திரட்டல்

கிராமியத்துறையின் சேமிப்புக்கள் முக்கியமாக, கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினாலும் வேளாண்மைப் பணிநிலையங்களிலுள்ள இலங்கை வங்கித் துணை அலுவலகங்களினாலும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினாலும், சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களினாலும் திரட்டப்பட்டன. கிராமியத் துறையிலிருந்து திரட்டப்பட்ட மொத்தச் சேமிப்புக்கள் 1993.12.31 இல் ரூ. 8.08 பில்லியனாக விளங்கியது. இது 1992 இறுதியில் ரூ. 6 பில்லியனாகக் காணப்பட்ட திரட்டப்பட்ட சேமிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 34.7 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1993.12.31 இல் திரட்டப்பட்ட ரூ. 8.08 பில்லியனில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் உதவுதொகை ஏறக்குறைய ரூ. 5.2 பில்லியனாகவும் இதனைத் தொடர்ந்து சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களும் (ரூ. 1.4 பில்லியன்) பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் (ரூ. 1.1 பில்லியன்), வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கித் துணை அலுவலகங்களும் (ரூ. 0.37 பில்லியன்) விளங்கின.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

### சேமிப்பு நிறுவனங்கள்

1993 இல் சேமிப்புக்களைத் திரட்டுவதில் தேசிய சேமிப்பு வங்கி தொடர்ந்து முக்கிய பங்கினை ஆற்றியது. இவ்வாண்டில் தேசிய சேமிப்பு வங்கியின் மொத்த வைப்புத்தளம் 28 சதவீதத்தினால் (ரூ. 92,800 இலட்சம்) விரிவடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 421,570 இலட்சமாக விளங்கியது. வங்கியின் வைப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சியானது 25 சதவீதத்தினால் (ரூ. 51,310 இலட்சம்) ரூ. 257,360 இலட்சத்திற்கு அதிகரித்த நிலையான வைப்புக்களில் முக்கியமாகப் பிரதி பலிக்கப்பட்டதுடன் 1993 இல் இத்தகைய வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட அதியுயர்ந்த வட்டியே இதற்கான காரணமாக அமைந்தது. இதேவேளையில் 1993 இல் சேமிப்பு வைப்புக்கள் 33 சதவீதத்தினால் (ரூ. 41,480 இலட்சம்) அதிகரித்தன. திறைசேரி உண்டியல்களின் வட்டிவீதங்கள் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து 1993 திசெம்பர் இறுதியில் ஓராண்டுக்கால முதிர்ச்சியைக்கொண்ட வைப்புக்கள்மீது செலுத்தப்பட்ட வட்டி ஆண்டொன்றுக்கு 17.0 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 16.0 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. எனினும் சேமிப்பு வைப்புக்களின் மீது வழங்கப்பட்ட வட்டி ஆண்டொன்றுக்கு 14.0 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது. ஏனைய தவணை வைப்புக்கள் தொடர்பான வட்டிவீதங்களும் முதிர்ச்சிக் காலத்திற்கேற்ப குறைக்கப்பட்டன.

இவ்வாண்டில் தேசிய சேமிப்பு வங்கி, குறைந்த வருமானம் பெறும் சொத்துக்களிலிருந்து கூடிய வருமானம் பெறும் சொத்துக்களுக்கு தனது முதலீட்டுப்பட்டியலைப் பன்முகப்படுத்தியது. இதன்படி இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் மொத்த முதலீடு ரூ. 325,500 இலட்சமாக விளங்கியது. ஆண்டின் இறுதியில் தேசிய சேமிப்பு வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் இறுதியில் ரூ. 140,860 இலட்சத்திலிருந்து ரூ. 200,960 இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ்வேளையில் நிருவாகக் கடன்பாட்டின்

பேரிலான தேசிய சேமிப்பு வங்கிக்கான அரசின் பொறுப்புகள் ரூ. 21,950 இலட்சமாக விளங்கி ரூ. 3,500 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின.

ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான உதவுதொகைகள் 1993 இல் விரிவடைந்தன. நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவுதொகை 1992 இன் ரூ. 750 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 1,578 இலட்சத்தினால் அதிகரித்தன. வட்டி வருவாய் மற்றும் முதலீட்டு இலாபங்கள் என்பனவற்றுடன் உதவு தொகைகளினதும் அதிகரிப்பின் காரணமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வெளிநின்ற உறுப்பினர் நிலுவை 1992 இன் ரூ. 63,600 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 78,240 இலட்சத்திற்கு விரிவடைந்தது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீடுகள் ரூ. 17,160 இலட்சத்தினால் அதிகரித்து 1993 இறுதியில் ரூ. 84,060 இலட்சமாக விளங்கின. முதலீடுகளின் அதிகரிப்பு முக்கியமாகத் திறைசேரி உண்டியல்களில் பிரதிபலிக்கப்பட்டது. திறைசேரி உண்டியல்களிலான மொத்த முதலீடுகள் 1992 இன் ரூ. 37,160 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 55,110 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதேவேளையில் ஏனைய முக்கிய முதலீடுகளாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தொகுதிக் கடன்கள் (ரூ. 4,280 இலட்சம்), அரச பிணைகள் (ரூ. 3,410 இலட்சம்), ஏனைய பிணைகள் (ரூ. 7,950 இலட்சம்), பங்குகள் (ரூ. 4,050 இலட்சம்) என்பன விளங்கின.

## நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனங்கள்

1993 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் சிறப்பாக கைத்தொழில் துறைக்கு கடன் வழங்குவதில் தனது நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொண்டது. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 441 இலிருந்து 551 இற்கு அதிகரித்தது. 1992 இன் ரூ. 3,810 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் கடன்களின் மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ. 2,860 இலட்சத்தினால் அதிகரித்தது. இதன்படி ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கடன் தொகை முன்னைய ஆண்டின் ரூ. 47,000 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 60,570 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதேவேளையில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மொத்தம் ரூ. 3,360 இலட்சம் கொண்ட ஒப்புரவு நிதியத்தினை வழங்கியதன் மூலம் 7 செயற்றிட்டங்களுக்கு உதவி வழங்கியது.

கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 22,980 இலட்சமாக விளங்கின. கொடுகடனைப் பெற்றுக்கொண்ட ஏனைய துறைகளாகச் சுற்றுலா (ரூ. 4,480 இலட்சம்), போக்குவரத்து (ரூ. 1,670 இலட்சம்) என்பன விளங்கின. முன்னைய ஆண்டுகளைப் போலவே கடன்களின் அதிகரித்த செறிவு நடுத்தரகால வகையில் காணப்பட்டதோடு இது மொத்தக் கடன் பட்டியலில் 68 சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவேளையில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த மூலவளங்கள் 1992 இன் ரூ. 27,620 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 45,480 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1993 இல் நிதியங்களில் பெரும்பாலானவை புதிய மூலதன உதவுதொகைகள் (ரூ. 10,200 இலட்சம்), கடன்களின் மீட்பு (ரூ. 14,070 இலட்சம்) ப. அ. அமைப்பு, சேர்மன் முதலீட்டு

## நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்டதும்

| நோக்கம் | இ. அ. நி. கூ. | | தே. சே. வ. | | அ. ஈ. மு. வ. | |
|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1992 | 1993 | 1992 | 1993 |
| 1. வேளாண்மை ... | 54 | 110 | | | | |
| i பெருந்தோட்டம் ... | 54 | 110 | – | – | – | – |
| ii உள்நாடு ... | – | – | – | – | – | – |
| iii கால் நடையும் பாற் பண்ணையும் ... | – | – | – | – | – | – |
| iv மீன்பிடி ... | – | – | – | – | – | – |
| v வேளாண்மை நோக்கங்களுக்கான நிலங்களின் கொள்வனவு | – | – | – | – | – | – |
| 2. கைத்தொழில் ... | 2,506 | 2,298 | – | – | – | – |
| i பெருந்தோட்டப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் | – | – | – | – | – | – |
| ii வேளாண்மைப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் | – | – | – | – | – | – |
| iii பொறியியலும் கட்டட வர்த்தகமும் ... | 36 | 86 | – | – | – | – |
| iv சுரங்கமகழ்தல் ... | 14 | 11 | – | – | – | – |
| v உணவு, குடிபானங்கள் புகையிலை ... | 492 | 329 | – | – | – | – |
| vi புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் ... | 1,095 | 330 | – | – | – | – |
| vii இறப்பரும் பிளாத்திக் உற்பத்திகளும் ... | 156 | 239 | – | – | – | – |
| viii உலோகங்கள் இரசாயனங்கள் பொறியியல் ... | 241 | 502 | – | – | – | – |
| ix ஏனைய தயாரிப்புகள் ... | 472 | 801 | – | – | – | – |
| 3. சுற்றுறுலா ... | 123 | 448 | – | – | – | – |
| 4. வர்த்தகம் (பணிகளிலுள்ள கைத்தொழில்கள்) ... | – | – | – | – | – | – |
| 5. நிதி ... | 39 | 110 | 550 | 580 | – | – |
| i நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் ... | 39 | 110 | 550 | 580 | – | – |
| ii முதலீட்டுக் கடன்கள் ... | – | – | – | – | – | – |
| iii ஏனையவைகள் ... | – | – | – | – | – | – |
| 6. வீடமைப்பு ... | – | – | 105 | 156 | 322 | 884 |
| i வீடுகளின் கொள்வனவு ... | – | – | 34 | 12 | 85 | 170 |
| ii கட்டடவாக்கம் ... | – | – | 71 | 144 | 237 | 714 |
| 7. கடன் மீட்பு ... | – | – | – | – | 4 | 15 |
| 8. ஏனைய கடன்கள ... | 171 | 197 | 1,052 | 1,510 | 11 | 138 |
| மொத்தம் (ஒப்புதலளிக்கப்பட்டவை) | 2,893 | 3,163 | 1,707 | 2,246 | 337 | 1,037 |
| வழங்கப்பட்ட கடன்கள் (1) .. | 1,642 | 1,928 | 1,700 | 2,245 | 302 | 674 |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த கடன்களில் வழங்கப்பட்ட கடனின் % .. | 57 | 61 | 100 | 100 | 90 | 65 |

குறிப்பு (1) முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்டு மீளாய்விற்குரிய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.

## வழங்கப்பட்டதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வீ. அ. நி. கூ. | | தே.அ. வ. | | தே. வீ. அ. மே. | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1992 | 1993 | 1992 | 1993 | 1992 | 1993 | 1992 | 1993 | 1992 | 1993 |
| – | – | 269 | 148 | – | – | 323 | 258 | 3.4 | 2.2 |
| – | – | – | – | – | – | 54 | 110 | 0.6 | 0.9 |
| – | – | 269 | 148 | – | – | 269 | 148 | 2.8 | 1.3 |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | 2,455 | 2,566 | – | – | 4,961 | 4,864 | 52.5 | 42.0 |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | 36 | 86 | 0.4 | 0.7 |
| – | – | – | – | – | – | 14 | 11 | 0.1 | 0.1 |
| – | – | 417 | 603 | – | – | 909 | 932 | 9.6 | 8.0 |
| – | – | 1,183 | 778 | – | – | 2,278 | 1,108 | 24.1 | 9.6 |
| – | – | 184 | – | – | – | 340 | 239 | 3.6 | 2.1 |
| – | – | 607 | 645 | – | – | 848 | 1,147 | 9.0 | 9.9 |
| – | – | 64 | 540 | – | – | 536 | 1,341 | 5.7 | 11.6 |
| – | – | 433 | 95 | – | – | 556 | 543 | 5.9 | 4.7 |
| – | – | 591 | 1,005 | – | – | 591 | 1,005 | 6.3 | 8.7 |
| – | – | – | 299 | – | – | 589 | 989 | 6.2 | 8.5 |
| – | – | – | 26 | – | – | 589 | 716 | 6.2 | 6.2 |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | 273 | – | – | – | 273 | – | 2.4 |
| 108 | 192 | – | – | 391 | 755 | 926 | 1,987 | 9.8 | 17.1 |
| 26 | 27 | – | – | – | 290 | 145 | 499 | 1.5 | 4.3 |
| 82 | 165 | – | – | 391 | 465 | 781 | 1,488 | 8.3 | 12.8 |
| – | 82 | – | – | – | | 4 | 97 | – | 0.8 |
| – | – | 259 | – | – | | 1,493 | 1,845 | 15.8 | 15.9 |
| 108 | 274 | 4,007 | 4,113 | 391 | 755 | 9,443 | 11,588 | 100.0 | 100.0 |
| 108 | 249 | 3,589 | 4,100 | 297 | 534 | 7,638 | 9,730 | | |
| 100 | 91 | 90 | 100 | 76 | 71 | 81 | 84 | | |

மூலங்கள் : இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (இ. அ. நி. கூ.)
தேசிய சேமிப்பு வங்கி (தே. சே. வ.)
அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ.)
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வீ. அ. நி. கூ.)
தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ.)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை (தே. வீ. அ. மே)

அபிவிருத்திக் கம்பனி, நெதர்லாந்து நிதியியல் கம்பனி என்பனவற்றின் கீழான வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் (ரூ. 14,500 இலட்சம்) என்பனவற்றிலிருந்து கிடைக்கப்பெற்றன.

1992 இல் 312 கடன்கள் தொடர்பாக ஒப்புதலளிக்கப்பட்ட ரூ. 40,070 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் தேசிய அபிவிருத்தி வங்கி ரூ. 41,140 இலட்சம் கொண்ட 262 கடன்களுக்கு ஒப்புதலளித்தது. இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 62 சதவீதத்தினை (ரூ. 25,660 இலட்சம்) கைத்தொழில்துறை பெற்றுக்கொண்டது . 1993 இல் கடன்களைப் பெற்றுக்கொண்ட ஏனைய முக்கிய துறைகளாகப் புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் (ரூ. 7,780 இலட்சம்), உணவு, குடிபானம், புகையிலை (ரூ. 6,030 இலட்சம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (ரூ. 4,750 இலட்சம்) என்பன விளங்கின. இதேவேளை 1993 இல் பணிகள் துறைக்கு ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் ரூ. 10,050 இலட்சமாக விளங்கின. வேளாண்மை, சுற்றுலா மற்றும் நிதித்துறைகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய துறைகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக்கடன்கள் ரூ. 5,420 இலட்சமாக விளங்கின. கடந்த காலத்தைப்போன்றே கடன்களிற் பெரும்பாலானவை (87 சதவீதம் அல்லது ரூ. 35,640 இலட்சம்) தொடர்ந்தும் நடுத்தர, பாரிய அளவுக் கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கானவையாகக் காணப்பட்டன. இக்கடன்களின் மீது செலுத்தப்பட வேண்டிய சராசரி வட்டிவீதம் 20.5 சதவீதமாக இருந்தது. தேசிய அபிவிருத்தி வங்கிக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த நிதியங்கள் ரூ. 49,290 இலட்சமாகும். இவை கடன்களின் மீட்பு (ரூ. 21,430 இலட்சம்), ப. அ. அமைப்பு, பொதுநலவாய அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின்கீழான வெளிநாட்டுக் கடன்பாடுகள் (ரூ. 16,660 இலட்சம்) என்பனவற்றின் ஊடாகத் திரட்டப்பட்டன.

1993 இல் அரச ஈட்டு முதலீட்டு வங்கி வீடமைப்பு மற்றும் வீடுகளினதும், வீடமைப்புக் காணிகளினதும் கொள்வனவு என்பனவற்றிற்காகத் தொடர்ந்து கடன் வசதிகளை வழங்கி வந்தது. கடன்களில் பெரும்பாலானவை வீடுகளில் நிருமாணத்துக்கானதாக அமைந்து இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறின. வங்கியினது நடவடிக்கைகளின் கணிசமான வளர்ச்சியொன்றைப் பிரதிபலிக்கும்வகையில் அதனால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத்தொகை 1992 இன் ரூ. 3,370 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் ரூ. 10,370 இலட்சமாக விளங்கியது. 1992 இன் ரூ. 3,020 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 6,740 இலட்சமாக விளங்கின. வழங்கப்பட்ட கடன்களில் 77 சதவீதமானவை ரூ. 100,000 இற்கும் ரூ. 1,000,000 இற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டதுடன் ஆண்டொன்றுக்கு 20 – 22 சதவீத வட்டியினையும் கொண்டிருந்தன. 1993 இல் கடன்களின் மீட்பு (ரூ. 6,340 இலட்சம்), வைப்புத் திரட்டல் (ரூ. 1,480 இலட்சம்) என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த மூலவளங்கள் ரூ. 10,280 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1992 ஆம் ஆண்டிற்கான ஒப்பிடத்தக்க தொகை ரூ. 4,790 இலட்சமாகும்.

## நிதிக்கூட்டு நிலையங்கள்

தொழிற்பாட்டிலிருந்த நிதிக்கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 24 இற்கு வீழ்ச்சியடைந்தது. வரையறுக்கப்பட்ட சப்றா யுனிக்கோ

பினான்ஸ் வரையறுக்கப்பட்ட சிற்றி கிறடிற் ஆகிய இரு கூட்டுநிலையங்களினதும் பதிவு இரத்துச் செய்யப்பட்டதுடன் ஒரு கூட்டு நிலையத்தின் நடவடிக்கைகள் இவ்வாண்டில் நிறுத்தி வைக்கப்பட்டன. 24 நிதிக்கூட்டு நிலையங்களினது மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1993 இறுதியில் ரூ. 90,210 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட ரூ. 12,790 இலட்சங்கொண்ட வீழ்ச்சியைக்காட்டின.

சொத்துக்கள் பக்கத்தில் முன் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து தவணைக் கொள்வனவு வியாபார நடவடிக்கைகள் ரூ. 28,190 இலட்சத்திலிருந்து ஆண்டின் இறுதியில் ரூ. 21,410 இலட்சத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. எனினும் வெளிநின்ற கடன்கள் ரூ. 840 இலட்சத்தால் ரூ. 31,390 இலட்சத்திற்கு அதிகரித்த வேளையில், முதலீடுகள் ரூ. 890 இலட்சத்தால் ரூ. 13,830 இலட்சத்திற்கு அதிகரித்தன. வழங்கப்பட்ட கடன்களில் குத்தகை நிதியிடல் ரூ. 5,310 இலட்சத்தால் அதிகரித்ததுடன், வெளிநின்ற பட்டியலிடப்பட்ட கடனின் 75 சதவீதத்திற்கு (ரூ. 23,660 இலட்சம்) வகைகூறியது. அதேவேளையில் கையிலுள்ள காசு, வர்த்தக வங்கிகளுடான வைப்புக்கள், அரச பிணைகளிலான முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்தத் திரவச்சொத்துக்கள் ரூ. 10,610 இலட்சத்திலிருந்து ரூ. 10,430

அட்டவணை 1.72

**நிதிக்கூட்டு நிலையங்களின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடும்**

(ரூபா பத்து இலட்சங்களில்)

| | 1992 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 1993 மாச்சு 31 இல் உள்ளவாறு | 1993 யூன் 30 இல் உள்ளவாறு | 1993 செத்தெம்பர் 30 இல் உள்ளவாறு | 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| **மூலங்கள்** | | | | | |
| 1. மூலதனக் கணக்கு | 574.0 | 1,252.5 | 1,193.0 | 1,307.4 | 1,335.1 |
| 2. வைப்புக்கள் | 5,641.8 | 5,157.5 | 5,219.1 | 5,344.2 | 5,492.6 |
| 3. கடன்பாடுகள் | 3,273.8 | 1,132.8 | 996.7 | 1,084.9 | 1,157.7 |
| 4. ஏனைய பொறுப்புக்கள் | 810.8 | 821.3 | 802.7 | 849.0 | 1,035.7 |
| மொத்தம் | 10,300.4 | 8,364.1 | 8,211.5 | 8,585.5 | 9,021.1 |
| **பயன்பாடு** | | | | | |
| 1. வாடகைக் கொள்வனவு வியாபாரம் | 2,819.0 | 2,028.1 | 2,059.0 | 2,141.3 | 2,140.7 |
| 2. வெளிநிற்கும் கடன்கள் | 3,054.7 | 2,875.5 | 2,805.1 | 2,969.2 | 3,138.8 |
| 3. முதலீடுகள் | 1,293.6 | 1,220.1 | 1,203.4 | 1,310.2 | 1,383.4 |
| 4. ஏனைய சொத்துக்கள் | 3,133.1 | 2,240.4 | 2,144.0 | 2,164.8 | 2,358.2 |
| மொத்தம் | 10,300.4 | 8,364.1 | 8,211.5 | 8,585.5 | 9,021.1 |
| மத்தி வங்கிக்கு அறிக்கையிட்ட நிதிக் கூட்டு நிலையங்கள் | 27.0 | 25.0 | 24.0 | 24.0 | 24.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலட்சத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. பொறுப்புக்கள் பக்கத்தில் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 1,500 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 54,920 இலட்சமாக விளங்கின. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளிடமிருந்தான கடன்பாடுகளை உள்ளடக்கிய நிதிக்கூட்டு நிலையங்களின் கடன்பாடுகள் ரூ. 32,740 இலட்சத்திலிருந்து ரூ. 11,580 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1992 இறுதியிலிருந்த 18.8 சதவீதத்திலிருந்து 1993 இறுதியில் 19.0 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் (நநீகொநி) கீழ் வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணக்கொடுப்பனவுகள் இவ்வாண்டில் தொடர்ந்து வழங்கப்பட்டன. இந்நிவாரணத் திட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற மீள் நிதியிடல் வசதிகள் 1993 இறுதியில் ரூ. 20,450 இலட்சமாக விளங்கின. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் இறுதியில் இவை ரூ. 18,100 இலட்சமாகக் காணப்பட்டன.

## சிறப்பியல்பு வாய்ந்த நிதி நிறுவனங்கள்

### வணிக வங்கித்தொழில்

1993 இல் செயற்பாட்டிலுள்ள வணிக வங்கிகளின் எண்ணிக்கை 4 ஆக மாறாது காணப்பட்டது. வணிக வங்கித்தொழிலின் அபிவிருத்திக்கு இவ்வாண்டில் மேலதிக உந்து சக்தியை வழங்கிய செழிப்புமிக்க பங்குச் சந்தையின் காரணமாக வணிக வங்கித்தொழிலில் உறுதியான வளர்ச்சி காணப்பட்டது.

நாட்டில் தொழிற்படும் நான்கு வணிக வங்கிகளினதும் மொத்தச் சொத்துக்கள் 1992 இன் ரூ. 19,090 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 40,740 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதே வேளையில் இவ்வாண்டில் இக்கம்பனிகளின் மொத்த வருமானம் 66 சதவீதத்தினால் ரூ. 5,190 இலட்சத்திற்கு அதிகரித்தது. வணிக வங்கிகளின் நடவடிக்கைகள் பெரும்பாலும் வர்த்தக உண்டியல்களின் கழிவு, குத்தகை நிதியிடல், திறைசேரி உண்டியல்களிலும் பங்குச் சந்தைகளிலும் முதலிடுதல் என்பனவற்றில் செறிவாகக் காணப்பட்டு 1993 இன் மொத்த வருமானத்தில் 73 சதவீதத்திற்கு வகைகூறின.

### துணிகரத் தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள்

1993 இறுதியில் நாட்டில் தொழிற்பட்ட துணிகரத் தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகளின் எண்ணிக்கை 6 ஆக மாறாது காணப்பட்டது. அவையாவன வரையறுக்கப்பட்ட கப்பிட்டல் டிவலொப்மன்ட் அன்ட் இன்வெஸ்ட்மன்ட் கம்பனி, வரையறுக்கப்பட்ட ஈகுவிடி இன்வெஸ்ட்மன்ட் கம்பனி, வரையறுக்கப்பட்ட லங்கா வென்சர் இன்வெஸ்ட்மன்ட் (தனியார்), வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி வென்சர் இன்ஸ்வெஸ்ட்மன்ட், வரையறுக்கப்பட்ட பீப்பல்ஸ் வென்சர் இன்வெஸ்ட்மன்ட் கம்பனி (தனியார்) வரையறுக்கப்பட்ட த சென்ரல் பினான்ஸ் வென்சர் பண்ட் என்பனவாகும். தயாரிப்பு மற்றும் ஏற்றுமதித் துறைகளில் பட்டியலிடப்படாத சிறிய நடுத்தர கம்பனிகளுக்கு ஒப்புரவு அல்லது ஒப்புரவு

அட்டவணை 1.73

### வணிக வங்கிகளின் நடவடிக்கைகளின் முன்னேற்றம் (1992 - 1993)

ரூபா பத்து இலட்சம்

| | 1992 | 1993* |
|---|---|---|
| 1. குத்தகைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 94.0 | 169.0 |
| 2. வர்த்தக உண்டியல்களின் கழிவு மீதான வட்டி | 130.9 | 170.4 |
| 3. நிதி மற்றும் சந்தைப் படுத்தல் ஆலோசனை | 0.5 | 30.1 |
| 4. கீழ் வரைவுத் தரகுப்பணம் | 3.0 | 4.3 |
| 5. காப்புறுதித் தரகுப்பணம் | 1.9 | 1.6 |
| 6. வரையறை வர்த்தக வட்டி | - | 10.7 |
| 7. பங்கு முதலீட்டின் இலாபம் | 3.5 | 27.5 |
| 8. திறைசேரி உண்டியல் வட்டி | 5.0 | 37.7 |
| 9. ஏனையவை | 73.9 | 67.8 |
| மொத்தம் | 312.7 | 519.1 |

* தற்காலிகமானவை

மூலங்கள் : வரையறுக்கப்பட்ட இலங்கை வணிக வங்கி
வரையறுக்கப்பட்ட மக்கள் வணிக வங்கி
வரையறுக்கப்பட்ட செலான் வணிக வங்கி
வரையறுக்கப்பட்ட வனிக் ஒருங்கிணைப்பு

வகை நிதியினை வழங்கும் இக்கம்பனிகள் தமது மொத்தச் சொத்துக்களை 1992 இறுதியில் ரூ. 7,240 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 10,470 இலட்சத்திற்கு அதிகரித்துக்கொண்டன.

### குத்தகைக் கம்பனிகள்

முன்னைய ஆண்டைப்போலவே இவ்வாண்டிலும் நாட்டில் மூன்று பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள் தொழிற்பட்டன. இக்கம்பனிகளினால் நிறைவேற்றப்பட்ட குத்தகைகளின் மொத்தப் பெறுமதி ரூ. 11,400 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 19 சதவீத (ரூ. 1,720 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 7 சதவீத (ரூ. 780 இலட்சம்) வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 1993 இல் கைத்தொழில், நிருமாணம், பணிகள் மற்றும் ஏனைய துறைகளின் குத்தகை நடவடிக்கைகள் அதிகரித்த வேளையில் வர்த்தகம் மற்றும் போக்குவரத்துத் துறைகள் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. முன்னைய ஆண்டைப்போலவே குத்தகை நிதியிடலுக்கான ஆகக்கூடிய கேள்வி வர்த்தக ஊர்திகளுக்கானவையாக இருந்தது.

### காப்புறுதி

நாட்டில் தொழிற்படும் காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 5 ஆக மாறாது காணப்பட்டதுடன் இது அரசுக்குச் சொந்தமான இரண்டு காப்புறுதிக் கம்பனிகளையும் மூன்று தனியார் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது. 1993 இல்

ஆயுட் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டும் விரிவடைந்தன. ஆயுட்காப்புறுதிகளின் மொத்த எண்ணிக்கை 1992 இன் 438,600 இலிருந்து 1993 இல் 475,800 இற்கு அதிகரித்த வேளையில் மொத்தக் கட்டுப்பண வருமானம் ரூ. 11,690 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 15,080 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதே விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பொதுக்காப்புறுதி வியாபாரத்திலிருந்தான மொத்தக் கட்டுப்பண வருமானம் ரூ. 1,540 இலட்சத்தினால் ரூ. 18,520 இலட்சத்திற்கு அதிகரித்தது.

## பணச்சந்தை

### பொதுவான போக்குகள்

பாரிய மூலதன உட்பாய்ச்சல்கள் மற்றும் தீவிரமான திறைசேரி உண்டியல் கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றின் பின்னணியில் ஆய்விற்குரிய ஆண்டில் பணச்சந்தை சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. பணச்சந்தையில் குறுகியகால வட்டிவீதங்களைத் தீர்மானிப்பதில் திறைசேரி உண்டியல் சந்தை குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் பல சந்தர்ப்பங்களில் வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்கு வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பானது அழைப்புச் சந்தையில் நிதியங்களுக்கான அதிகரித்த கேள்விக்குப் பங்களிப்புச் செய்தது. பணச்சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் பணச்சந்தை வீதங்களில் நிலவிய தவறான தளம்பல்களைக் குறைக்கும் நோக்கத்துடன் 1993 ஒற்றோபரில் மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களுக்கு மீள் கொள்வனவுச் சந்தையை அறிமுகப்படுத்தியதாகும்.

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை

1993 இல் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தையின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தன. இவ்வாண்டில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையின் மொத்தப் புரள்வு 81 சதவீதத்தினால் (ரூ. 1,678,250 இலட்சம்) அதிகரித்தது. 1993 இல் நியதி ஒதுக்கு விகிதம் பல தடவைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டமை அழைப்புப் பணத்திற்கு உயர்ந்த கேள்வியைத் தோற்றுவித்தது. அதன்படி, 1993 சனவரியில் 10 — 32 சதவீத வீச்சிலிருந்து 1993 மாச்சில் 3 - 20 சதவீதவீச்சிற்கும் வீழ்ச்சியடைந்த அழைப்புப் பணச்சந்தையின் வீதங்கள் 1993 மேயில் 15 - 35 சதவீத வீச்சிற்கு அதிகரித்தன. 1993 ஒற்றோபரில் திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச்சந்தை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 14 - 23 சதவீதமான குறுகிய வீச்சிற்குள் நிலைப்பட்டன. எனினும் முதலாந்தரப் பங்குச் சந்தை வழங்கல்களுக்கு மேலதிக தொகை செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து திரவத்தன்மை சில வங்கிகளில் தற்காலிகமாக குவிந்து காணப்பட்டமையின் காரணமாக அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 1993 நவெம்பரில் 8.0 - 18.5 சதவீதம் கொண்ட தாழ்ந்த வீச்சிற்கு வீழ்ச்சியுற்றன. இவ்வீதங்கள் உயர்வுபெற்று 1993 இறுதியில் மீண்டும் 16.5 - 28.0 சதவீத வீச்சினை அடைந்தன.

அட்டவணை 1.74

## பணச் சந்தைத் தொழிற்பாடுகள் (1991 - 1993)

(ப. இ. ரூபாய்களில்)

| காலம் | | அழைப்புப் பணச் சந்தை | | முதலாந்தரத் திறைசேரிச் சந்தை | | | | | | இரண்டாந்தரத் திறைசேரிச் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஏற்றுக்கொள்ளப்பட்ட (கொள்வனவுகள்) தொகை | | | | | | |
| | | மொத்த கடன் வழங்கல்/ கடன்பாடு | கால முடிவில் வெளி நின்றவை (அ) | மொத்த வெளி நின்றவை | வழங்கப் பட்ட தொகை | மத்திய வங்கி | வர்த்தக வங்கிகள் | ஏனையவை | மொத்தம் | மொத்த விற்பனை | மொத்த கொள்வனவு | கால முடிவில் வெளிநின்ற நிலை |
| 1991 | 1ஆம் காலாண்டு | 50,194 | 1,304 | 68,967.7 | 36,953.2 | 20,370.4 | 7,834.1 | 8,748.6 | 36,953.2 | 25,472 | 8,716 | 2,073 |
| | 2ஆம் காலாண்டு | 54,114 | 2,167 | 70,467.7 | 34,137.2 | 14,953.8 | 4,625.5 | 14,557.9 | 34,137.2 | 16,768 | 8,584 | 1,674 |
| | 3ஆம் காலாண்டு | 65,612 | 798 | 70,467.7 | 28,968.6 | 14,965.3 | 4,265.3 | 9,738.0 | 28,968.6 | 20,069 | 8,489 | 3,040 |
| | 4ஆம் காலாண்டு | 54,940 | 1,592 | 72,967.7 | 31,509.1 | 18,150.4 | 5,237.5 | 8,121.2 | 31,509.1 | 18,078 | 10,898 | 1,453 |
| 1992 | 1ஆம் காலாண்டு | 40,912 | 580 | 73,722.4 | 42,723.3 | 21,652.8 | 4,245.7 | 17,824.8 | 43,723.3 | 32,158 | 12,520 | 2,103 |
| | 2ஆம் காலாண்டு | 58,123 | 1,265 | 76,967.7 | 65,821.3 | 38,341.5 | 8,591.3 | 18,888.5 | 65,821.3 | 41,328 | 10,832 | 1,927 |
| | 3ஆம் காலாண்டு | 45,823 | 1,288 | 82,295.7 | 47,115.7 | 28,346.2 | 8,351.4 | 10,418.0 | 47,115.6 | 24,345 | 11,234 | 3,869 |
| | 4ஆம் காலாண்டு | 62,307 | 1,458 | 87,095.7 | 38,147.9 | 20,851.9 | 12,722.0 | 4,574.0 | 38,147.9 | 21,535 | 15,026 | 3,696 |
| 1993 | 1ஆம் காலாண்டு | 78,122 | 1,059 | 88,095.7 | 35,632.2 | 11,120.2 | 13,749.0 | 10,763.0 | 35,632.2 | 27,670 | 16,565 | 3,285 |
| | 2ஆம் காலாண்டு | 100,584 | 1,571 | 92,495.7 | 50,735.9 | 16,610.9 | 20,467.0 | 13,658.0 | 50,735.9 | 27,026 | 13,000 | 3,962 |
| | 3ஆம் காலாண்டு | 98,377 | 1,004 | 94,495.7 | 42,028.9 | 14,076.3 | 12,896.6 | 15,056.0 | 42,028.9 | 27,377 | 8,150 | 5,742 |
| | 4ஆம் காலாண்டு | 97,907 | 1,192 | 97,195.7 | 30,459.3 | 6,394.0 | 17,622.5 | 6,422.8 | 30,459.3 | 12,690 | 9,136 | 2,777 |

(அ) ஒவ்வொரு காலாண்டிலும் இறுதிக் கிழமையில் வெளி நிற்கும் தொகை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## திறைசேரி உண்டியல் சந்தை

### (அ) முதலாந்தரச் திறைசேரி உண்டியல் சந்தை

1993 இல் முதலாந்தரச் சந்தையில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி 1992 இன் ரூ. 193.8 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 158.9 பில்லியன்களாக இருந்தது. இவ்வாண்டில் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட புதிய வழங்கல்கள் ரூ. 13.6 பில்லியன்களாக அமைந்து முன்னைய ஆண்டின் வழங்கலைவிட ரூ. 0.5 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தன. அதேவேளை இவ்வாண்டில் ரூ. 3.5 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்கள் கழிவு செய்யப்பட்டன. இதன்படி வெளிநின்ற மொத்த திறைசேரி உண்டியல்கள் 1992 இறுதியில் ரூ. 87.1 பில்லியனிலிருந்து 1993 இறுதியில் ரூ. 97.2 பில்லியனுக்கு உயர்வடைந்தன. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பிரதிபலிக்கின்றவிதத்தில் மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் 1992 இன் ரூ. 21.8 பில்லியனிலிருந்து 1993 இல் ரூ. 3.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. கவர்ச்சிகரமான விளைவுகளினால் தூண்டப்பட்டதன் விளைவாக, வங்கியல்லாத் தனியார்துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1992 இல் ரூ. 43.6 பில்லியனிலிருந்து 1993 இல் ரூ. 63.7 பில்லியனுக்கு விரிவடைந்தன. திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகளை 1992 இன் ரூ. 14.1 பில்லியனிலிருந்து 1993 இல் ரூ. 20.1 பில்லியனுக்கு உயர்த்தியதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கி, வங்கியல்லாத்துறையிலிருந்து திறைசேரி உண்டியலில் முதலீடு செய்த முதன்மை முதலீட்டாளராக விளங்கியது. முதலாந்தரச் சந்தையில் வர்த்தக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் 1992 இன் ரூ. 22.8 பில்லியனிலிருந்து 1993 இல் ரூ. 49.6 பில்லியனுக்கு அதிகரித்தன. எனினும் பொதுமக்களுக்கான தீவிரமான விற்பனையை பிரதிபலிக்கின்ற விதத்தில் வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 10.6 பில்லியனிலிருந்து இவ்வாண்டில் ரூ. 14.3 பில்லியன்களுக்கு மட்டும் அதிகரித்தன.

### (ஆ) இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை

மத்திய வங்கியிலிருந்தான இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்களின் விற்பனை (கழிவு செய்தல்) 1992 இன் ரூ. 119.4 பில்லியனிலிருந்து 1993 இல் ரூ. 94.8 பில்லியனுக்கு வீழ்ச்சிடைந்தவேளையில் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுகள் (மீள் கழிவு செய்தல்) இதே காலப்பகுதியில் ரூ. 49.6 பில்லியனிலிருந்து ரூ. 46.9 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. முதலாந்தரச் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த விளைவு வீதங்களின் பின்னணியில் இவ்வாண்டில் இரண்டாந்தரச் சந்தையின் வீதங்களும் உயர்வாகவே காணப்பட்டன. மூன்று மாத உண்டியல்களுக்கான கழிவுவீதம் 1992 இறுதியில் 17.26 சதவீதத்திலிருந்து 1993 இறுதியில் 17.84 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் செத்தெம்பர் நடுப்பகுதியில் 20.67 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதேபோன்று 3 மாத உண்டியல்கள் மீதான மீள் கழிவு வீதம் முன்னைய ஆண்டின் இறுதியின் 18.85 சதவீதத்திலிருந்து செத்தெம்பர் நடுப்பகுதியில் 22.33 சதவீதத்திற்கு அதிகரித்து அதன் பின்னர் 1993 இறுதியில் 20.84 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**(இ) திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச் சந்தை**

1993 ஒற்றோபரில் மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் விற்பனையைத் தொடங்கியது. ஆரம்பத்தில் ஒருநாள் மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் மீதான விளைவு (றிப்போ வீதம்) முன்னைய வார ஏலத்தில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவிலும் பார்க்க 1 சதவீதம் குறைவானதாக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களையும் சந்தையிலுள்ள பொதுவான திரவத்தன்மை நிலைமையினையும் கருத்திற்கொண்டு ஒரு நாள் மீள் கொள்வனவு உடன்படிக்கை மீதான விளைவு நிர்ணயிக்கப்பட்டது.

சந்தையில் காணப்பட்ட உயர்ந்த திரவத்தன்மை நிலைமைகளைத் தொடர்ந்து ஒரு நாள் மீள் கொள்வனவு வீதம் ஒற்றோபர் இறுதியின் 17.90 சதவீதத்திலிருந்து நவெம்பர் நடுப்பகுதியில் 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் ஆண்டின் இறுதிப்பகுதியில் திரவத்தன்மை நிலைமை படிப்படியாக இறுக்கமாக்கப்பட்டதுடன் ஒரு நாள் மீள் கொள்வனவு வீதம் படிப்படியாக நவெம்பரில் 15.0 சதவீதத்திற்கும் 1993 திசெம்பரில் 16.5 சதவீதத்திற்கும் உயர்வடைந்தது.

## உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை

இவ்வாண்டில் முக்கியமாக வர்த்தக வங்கிகளிலிருந்து இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ. டொலரை உடன் வாங்குபவராக இயங்கியதன் மூலம் மத்திய வங்கி உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. 1992 இல் 1 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்ட உடன் வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையிலான இடைவெளி இவ்வாண்டு முழுவதும் மாற்றமுறாதிருந்தது. 1992 இறுதியில் ஐ. அ. டொலரொன்றிற்கு ரூ. 45.77 ஆக இருந்த உடன்வாங்கும் வீதம் 1993 இறுதியில் ஐ. அ. டொலரொன்றிற்கு ரூ. 49.31 ஆக உயர்வடைந்தவேளையில் உடன்விற்கும் வீதம் இதே காலப்பகுதியில் ஐ. அ. டொலரொன்றிற்கு ரூ. 46.23 இலிருந்து ஐ. அ. டொலரொன்றிற்கு ரூ. 49.81 இற்கு அதிகரித்தது. மத்திய வங்கியின் நடுவீதம் 1992 இறுதியின் ஐ. அ. டொலெரான்றிற்கு ரூ. 46.00 உடன் ஒப்பிடுகையில் 1993 இறுதியில் ஐ. அ. டொலரொன்றிற்கு ரூ. 49.56 ஆக விளங்கியது. மத்திய வங்கியின் உடன் கொள்வனவுகள் 1992 இன் ஐ. அ. டொலர் 4,580 இலட்சத்திலிருந்து 1993 இல் ஐ. அ. டொலர் 6,430 இலட்சத்திற்கு உயர்வடைந்து 40 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை உடன் விற்பனைகள் ஐ. அ. டொலர் 200 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் மட்டமான ஐ. அ. டொலர் 840 இலட்சத்திலிருந்து 76 சதவீதமான வீழ்ச்சியைப் பிரதிபலித்தன.

## கரைகடந்த சந்தை

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் சிறிதளவு சுருக்கத்தினைக் காட்டின. நாட்டிலுள்ள 23 வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/

பொறுப்புக்கள் ஆண்டின் இறுதியில் ஐ. அ. டொலர் 11,350 இலட்சத்திற்கு 3 சதவீதத்தினால் (ஐ. அ. டொலர் 380 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. வதிவற்றோருக்கான முற்பணங்கள் 15 சதவீதத்தினால் (ஐ. அ. டொலர் 840 இலட்சம்) வீழ்ச்சியடைந்தவேளையில் வதிவுடையோருக்கான முற்பணங்கள் இவ்வாண்டில் 6 சதவீதத்தினால் (ஐ. அ. டொலர் 370 இலட்சம்) அதிகரித்தன. வதிவோர் வகைக்கான முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முதலீட்டுச்சபையின் எல்லைக்குள் வரும் தொழில் முயற்சிகளுக்கான முற்பணங்களில் முழுமையாகப் பிரதிபலித்தது. அதேவேளை வெ. நா. வ. பிரிவுகளிலிருந்து ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கடன்கள் வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுப் பிரிவுகளுக்கு அத்தகைய கடன்கள் மாற்றல் செய்யப்பட்டமையுடன் 1993 சனவரியிலிருந்து நிறுத்தப்பட்டன. பொறுப்புக்கள் பக்கத்தில் இலங்கை முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் வைப்புப் பொறுப்புக்கள் இவ்வாண்டில் 90 சதவீதத்தினால் (ஐ. அ. டொலர் 600 இலட்சம்) அதிகரித்த போதும் வதிவற்றோரின் வைப்புப் பொறுப்புக்கள் 5 சதவீதத்தினால் (ஐ. அ. டொலர் 340 இலட்சம்) வீழ்ச்சியடைந்தவேளையில் வதிவோரின் அத்தகைய வைப்புப்பொறுப்புக்கள் 4 சதவீதத்தினால் (ஐ. அ. டொலர் 160 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன.

## வைப்புச் சான்றிதழ்கள்

இவ்வாண்டில் 4 ஆண்டுகளுக்குக் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட வைப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. வர்த்தக வங்கிகளினாலும் நிதிக்கூட்டு நிலையங்களினாலும் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற பெறுமதி 1992 இறுதியில் ரூ. 41.300 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 50,450 இலட்சத்திற்கு விரிவடைந்து 22 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அதேவேளை வைப்புச் சான்றிதழ்களின் மீது வர்த்தக வங்கிகளினால் செலுத்தப்பட்ட வட்டிவீதங்கள் முன்னைய ஆண்டின் 9 – 22 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 1993 இறுதியில் 14 – 21 சதவீத வீச்சிற்கிடையில் வேறுபட்டன. இவ்வாண்டில் வைப்புச் சான்றிதழ்களின் மீது நிதிக்கூட்டு நிலையங்களினால் செலுத்தப்பட்ட வீதங்கள் 16 சதவீதத்திற்கும் 22 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன.

## மூலதனச் சந்தை

1993 இல் பங்குச்சந்தை முன்னைய ஆண்டில் நிலவிய மந்த நிலைக்கு மாறாக உன்னதமான தன்மையை அடைந்தது. பங்கு வர்த்தகத்தில் இலங்கையரல்லாதோரினால் காட்டப்பட்ட ஈடுபாடு தேசிய அபிவிருத்தி வங்கி, சதோச மோட்டார், களனிரயர், வரையறுக்கப்பட்ட வனிக் இன்கோப்பரேசன், வரையறுக்கப்பட்ட செலான் மேர்சன்ட் வங்கி என்பனவற்றால் வழங்கப்பட்ட புதிய பங்கு வழங்கல்கள், பங்கு வர்த்தகத்தில் உள்நாட்டு முதலீட்டாளர்கள் தீவிரமாகப் பங்கேற்றமை என்பன இவ்வாண்டில் பங்குச்சந்தை நடவடிக்கைகள் எழுச்சியுறத்தூண்டுதலாக அமைந்தன.

உன்னதமான சந்தை நிலைமைகள்அனைத்துச் சந்தைக் குறிகாட்டிகளிலும் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டில் 28 சதவீத வீழ்ச்சியை (233 புள்ளிகள்) பதிவு

அட்டவணை 1.75

பங்குச் சந்தைக் குறிகாட்டிகள் 1990 - 1993

| | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| 1. சந்தை மூலதனவாக்கம் (ப.இ.ரூ.) | 36,880 | 81,084 | 64,655 | 123,789 |
| 2. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை (எண்) | 1 | 5 | 15 | 12 |
| 3. வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை (ப.இ.) | 1,099 | 1,209 | 1,615 | 2,355 |
| 4. பங்கு வழங்கல்களின் பெறுமதி (ப.இ.ரூ.) | 10,908 | 11,640 | 14,660 | வி.கி. |
| 5. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 42 | 79 | 88 | 351 |
| 6. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) | 1,563 | 4,304 | 4,969 | 18,579 |
| 7. விலைக் குறிகாட்டிகள் - கொ.ப.ப. இன் முழுவதும் திசெ. 31 இல் உள்ளவாறு | 384.39 | 837.79 | 605.31 | 978.97 |
| கொ.ப.ப. வின் மாறுபடும் சுட்டெண் திசெ. 31இல் உள்ளவாறு | 680.30 | 1,198.60 | 826.57 | 1,442.44 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

செய்த அனைத்து பங்கு விலைச்சுட்டெண்ணும் 1993 இல் 62 சதவீதங்கொண்ட (374 புள்ளிகள்) குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. இதே போன்று இவ்வாண்டில் உணர்விலைச்சுட்டெண் 1992 இன் 31 சதவீதம் (372 புள்ளிகள்) கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 75 சதவீதத்தினால் முன்னேற்றம் (615 புள்ளிகள்) கண்டது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்றவிதத்தில் பங்குச்சந்தையின் ஆண்டு மொத்தப் புரழ்வு 1992 இன் ரூ. 49,690 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 185,790 இலட்சத்திற்கு மிகக்கூடுதலாக அதிகரித்தது. மேலும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் சந்தை மூலதனமயமாக்கல் இதே காலப்பகுதியில் ரூ. 646,550 இலட்சத்திலிருந்து ரூ. 1,237,890 இலட்சத்திற்கு உயர்வடைந்து 91 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இதே போக்கினைத் தொடர்ந்து சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 1992 இன் 880 இலட்சத்திலிருந்து 1993 இல் 3,510 இலட்சத்திற்கு வளர்ச்சியுற்றது.

## முதலாந்தரப் பங்குச்சந்தை

1993 இல் முதலாந்தரச் சந்தையின் பங்கு வழங்கல்கள் பெருமளவிற்கு மேலதிகமாக உதவப்பட்டன. எனினும் இவ்வாண்டில் புதிய வழங்கல்களின் எண்ணிக்கையும் அதன் பெறுமதியும் முன்னைய ஆண்டிலும் குறைவாகவே இருந்தன. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை 1992 இன் 15 உடன் ஒப்பிடுகையில் 1993 இல் 12 ஆக விளங்கியது. அதேவேளை வழங்கப்பட்ட பங்குகளின்

அட்டவணை 1.77

1993 இல் கூட்டுநிலையங்களின் புதிய பங்கு வழங்கல்கள்

| கூட்டு நிலையங்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | முகப்புப் பெறுமதி ரூபா | கட்டணம் ரூபா | பங்குகளின் பெறுமதி ரூபா | வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி | உதவுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| பாம் கார்டன் ஹோட்டல் | 2,129,750 | 10 | 10 | 42,595,000 | 2,129,750 | வி.கி. |
| லங்கா செறமிக் | 7,500,000 | 10 | 15 | 187,500,00 | 7,500,000 | வி.கி. |
| பிறவுன்ஸ் பீச் | 2,000,000 | 10 | 10 | 40,000,000 | 2,000,000 | வி.கி. |
| சாம்சன் இன்ரர்நசனல் | 750,000 | 10 | 20 | 22,500,000 | 750,000 | 482 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 6,020,000 | 10 | 40 | 301,000,000 | 6,020,000 | 12,888 |
| குணாஸ் வோல்ஸ் | 375,000 | 10 | 06 | 6,000,000 | 375,000 | 8,913 |
| சதோச மோட்டோர்ஸ் | 450,000 | 10 | 45 | 24,750,000 | 450,000 | 4,288 |
| றிச்சார்ட் பீரிஸ் எக்ஸ் | 2,725,000 | 10 | 35 | 122,625,000 | 2,725,000 | 3,822 |
| ஈடென் ஹோட்டல் | 7,000,000 | 10 | - | 70,000,000 | 7,000,000 | 5,321 |
| வனிக் இன் கோப்பிரேசன் | 8,500,000 | 10 | 10 | 170,000,000 | 8,500,000 | 44,650 |
| செலான் மெர்சன்ட் | 3,800,000 | 10 | 05 | 57,000,000 | 3,800,000 | 6,200 |
| களனி டயர் | 7,800,000 | 10 | 16 | 202,800,000 | 7,800,000 | வி.கி. |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

எண்ணிக்கை 490 இலட்சமாக விளங்கி 1992 இல் வழங்கப்பட்ட 670 இலட்சப் பங்குகளிலும் பார்க்க கணிசமானளவு குறைவாக இருந்ததுடன் அத்தகைய பங்குகளின் முகப்புப் பெறுமதி ரூ. 4,905 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ. 6,690 இலட்சத்திலிருந்து வீழ்ச்சியொன்றைப் பிரதிபலித்தது. இவ்வாண்டின் மொத்தப் புதிய வழங்கலில் வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதித்துறை என்பன மொத்த எண்ணிக்கையில் 37 சதவீதத்திற்கும் புதிய வழங்கல்களின் மொத்தப் பெறுமதியில் 42 சதவீதத்திற்கும் வகைகூறின.

## இரண்டாந்தரப் பங்குச் சந்தை

1992 இல் அவதானிக்கப்பட்ட மந்தமான சந்தை நிலைமைகளுக்கு பெருமளவு மாறாக, 1993 இல் இரண்டாந்தரப் பங்குச்சந்தை ஆற்றல் பெற்றமையைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில் அனைத்துப் பங்குச்சந்தைச் சுட்டெண்களும் உணர்விலைச் சுட்டெண்ணும் கணிசமாக முன்னேற்றம் கண்டன. இதன்படி சந்தை மூலதனமயமாக்கல் 1992 இறுதியின் ரூ. 646,550 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 1,237,890 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதே போக்கினைத் தொடர்ந்து இதே காலப்பகுதியில் ஆண்டு மொத்தப் புரள்வு ரூ. 49,690 இலட்சத்திலிருந்து ரூ. 185,790 இலட்சத்திற்கு விரிவடைந்தது. அதேவேளை சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 880 இலட்சத்திலிருந்து 3,510 இலட்சத்திற்கு உயர்வடைந்தது.

அட்டவணை 1.76

முதலீட்டு வகை அடிப்படையில் வழங்கப்பட்ட புதிய பங்குகளின் எண்ணிக்கை 1990 - 1993

| முதலீட்டு வகை | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்புறுதி | _ | 2 | 1 | 3 |
| குளிர்பானங்கள், உணவு, புகையிலை | _ | _ | 2 | _ |
| இரசாயனமும், மருந்தாக்கல்களும் | _ | _ | _ | _ |
| சட்டவாக்கமும் பொறியியலும் | _ | _ | _ | _ |
| காலணிகளும், புடவைகளும் | _ | 1 | 1 | 1 |
| உணவகங்களும், பயணங்களும் | _ | 1 | 4 | 4 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | _ | _ | _ | _ |
| காணியும் சொத்தும் | _ | _ | _ | _ |
| தயாரிப்பு | 1 | 1 | 3 | 2 |
| உந்திகள் | _ | _ | _ | 1 |
| ஒயில் பாம் | _ | _ | _ | _ |
| பணிகள் | _ | _ | 1 | _ |
| களஞ்சியங்களும் நிரம்பலர்களும் | _ | _ | _ | _ |
| வர்த்தகம் | _ | 1 | 3 | 1 |
| மொத்தம் | 1 | 6 | 15 | 12 |
| கோரப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 7.0 | 12.1 | 67.0 | 49.0 |
| கோரப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ.) | 70.0 | 121.5 | 669.0 | 490.5 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

இரண்டாந்தரச்சந்தை கொடுக்கல் வாங்கல்களில் இலங்கையரல்லாதோரின் தீவிரமான பங்கேற்பினை 1993 ஆம் ஆண்டு காட்டியது. இலங்கையரல்லாதோரின் கொள்வனவுகள் 1992 இன் ரூ. 18,710 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 93,220 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் இலங்கையரல்லாதோரின் விற்பனைகள் ரூ. 11,260 இலட்சத்திலிருந்து ரூ. 60,560 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதித் துணைத்துறை 1993 இலும் தொடர்ந்து பெரும் புரழ்வினைப் பதிவுசெய்து சந்தையின் மொத்தச் புரழ்வின் 42 சதவீதத்திற்கு வகைகூறியது. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையின் நியதிகளில் உணவு, குடிபானம், புகையிலைத்துறை சந்தையில் தொடர்ந்தும் முன்னணித் துணைத்துறையாக விளங்கியது.

## கூறு நம்பிக்கைகள்

1993 இல் நாட்டில் தொழிற்பட்ட கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை நான்காகவே விளங்கியது. நம்பிக்கைக் கூறுகளின் மொத்தத்தேறிய சொத்துக்களின் பெறுமதி 1992 இறுதியின் ரூ. 19,430 இலட்சத்திலிருந்து 1993 இறுதியில் ரூ. 35,660 இலட்சத்திற்கு அதிகரித்து இவ்வாண்டில் 83 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. கூறு நம்பிக்கைகளின் மொத்தச் சொத்துக்களில் 70 சதவீதத்திற்கு

அட்டவணை 1.78

**1993 இல் இரண்டாந்தர பங்குச்சந்தையில் வர்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்**

| முதலீடுகள் | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| வங்கிகள், நிதி, காப்புறுதி | 74,350 | 71,093,343 | 7,862,401,514.50 |
| குடிபானங்கள், உணவு, புகையிலை | 32,477 | 77,115,163 | 1,538,266,405.25 |
| இரசாயனமும், மருந்தகங்களும் | 3,615 | 2,756,362 | 162,725,634.00 |
| கட்டடவாக்கமும், பொறியியலும் | 11,463 | 27,804,851 | 1,017,808,652.25 |
| காலணிகளும், புடவைகளும் | 8,716 | 7,366,004 | 240,804,034.50 |
| உணவகங்களும் பயணங்களும் | 29,503 | 45,719,119 | 1,715,849,192.50 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | 3,646 | 4,804,272 | 866,516,350.00 |
| காணியும் சொத்தும் | 10,271 | 22,620,937 | 484,538,793.25 |
| தயாரிப்பு | 40,252 | 71,487,443 | 2,753,862,910.75 |
| உந்திகள் | 5,499 | 7,195,414 | 605,581,490.75 |
| ஒயில் பாம் | 37 | 9,404 | 3,978,400.00 |
| பணிகள் | 2,976 | 3,984,443 | 527,112,635.25 |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | 1,035 | 1,501,022 | 116,335,340.50 |
| வர்த்தகம் | 7,900 | 7,699,932 | 683,528,805.50 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

வகைகூறும் சீ பாங்க் யூனிற் றஸ்ற் நசனல் ஈகுவிட்டிபன்ட் என்பனவற்றில் கூறுநம்பிக்கைகளின் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சி பிரதிபலிக்கப்பட்டது. . பங்குச்சந்தையில் காணப்பட்ட வரவேற்கத்தக்க வளர்ச்சிப்போக்கு இவ்வாண்டில் கூறு நம்பிக்கைகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைத்தூண்டுதலாக அமைந்தது. இதன் விளைவாக மொத்தச் சொத்துக்களில் ஒப்புரவு முதலீடுகளின் பங்கு 1992 இறுதியின் 37 சதவீதத்திலிருந்து 1993 இறுதியில் 64 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. குறுங்காலப் பணச் சந்தைக்கருவிகளின் வருவாயில் குறிப்பாக ஆண்டின் இறுதிப் பகுதியில் காணப்பட்ட வீழ்ச்சியடைகின்ற போக்கு மற்றும் பங்குச்சந்தையில் காணப்பட்ட எருதுத்தன்மையான அதிகரிப்பு என்பன இவ்வாண்டுக்காலத்தில் பங்குச்சந்தையில் கூறுநம்பிக்கை தீவிரமாகத் தொழிற்படுவதற்குத் தூண்டுதலாக அமைந்தன.